பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 22 திங்கட்கிழமை (04.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :129

# சந்திரிகா மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு சட்டத்தில் ஓட்டையுண்டு

## சிறையிலிருந்து விடயத்தை அம்பலப்படுத்துகிறார் எஸ்.பி.

கொழும்பு,ஏப்ரல்4



**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது தற்போதைய பதவிக்காலம் முழுந்த பின்னரும் மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக வருவதற்கு தற்போதைய அரசமைப்பிலும் சட்டத்திலும் இடமுண்டு. அந்தச் சட்ட ஓட்டையைப் பயன்படுத்தி மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு அவர் திட்டமிடுகின்றார்.**

**- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தேசத் திட்டத்தை அம்பலப்படுத்துகிறார் அவரின் அரசியல் எதிரியும் தற்போது சிறைக்கதவுகளுக்குப் பின்னால் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி.திஸநாயக்க.**

**சிறையில் இருந்தபடி உதயனுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இந்த விடயங்களை விவரித்திருக்கிறார்.**

எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்த சட்ட ஓட்டைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வாய்ப்பானவை என்பதை சட்டத்துறை வட்டாரங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

தற்போதைய அரசமைப்பின்படி ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படமுடியாது.

அரசமைப்பின் 31 (2) ஆவது பிரிவின் படி ஜனாதிபதிப் பதவிக்கு இரண்டு தடவைகள் தெரிவுசெய்யப்பட்டவர் மூன்றாவது தடவை மக்களால் அப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியை இழக்கின்றார்.

ஆனால், ஏற்கனவே இரண்டு தடவைகள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு ஜனாதிபதிப் பதவியை வகித்த ஒருவர் மூன்றாவது முறை தெரிவுசெய்யப்பட்ட வேறு ஒரு ஜனாதிபதி அந்தப் பதவியை இராஜினாமாச் செய்யும்போது ஏற்படும் வெற்றிடத்துக்கு மீண்டும் ஜனாதிபதியாக வரக்கூடாது என அரசமைப்புக் கூறவில்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள் -1 இன்றைய உதயனுடன் 'கல்விச் சுடர்' இணைப்பாக வெளியாகின்றது.

உங்களுக்குரிய கல்விச் சுடர் இணைப்பை முகவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வினாக்களுக்கான விடைகள் நாளை செவ்வாய்க்கிழமை உதயனில் வெளியிடப்படும்.

'கல்விச் சுடர்' தனிப் பிரதிகள் தேவைப்படுவோர் திங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் 'உதயன்' அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## கொழும்புக் கடலில் 'டொனாடோ'

கொழும்பில் பம்பலப்பிட்டி முதல் தெஹிவளை வரையான கடலோரப் பகுதியில் நேற்று 'டொனாடோ' நிலை ஏற்பட்டதாக இலங்கை வானிலை ஆராய்ச்சி நிலைய அதிகாரி பிவாரி பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடலுக்கு மேல் காணப்படும் வான்பரப்பில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண தர பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்


கொழும்பு, ஏப்.4

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று திங்கட்கிழமை வெளியிடப்படுமென்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இன்று மாலையே பெறுபேறுகள் வெளியிடப்படுவதால் மாணவர்கள் இன்று நள்ளிரவு

அல்லது நாளை காலை முதல் www. doenets.lk என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் இணையதளத்தினூடாகப் பெறுபேறுகளை அறியமுடியும்.

பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் இன்று பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பப்படுமென்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவிக்கின்றது.



கத்தோலிக்க மக்களின் திருத்தந்தை பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் உடல் வத்திகான் அப்போஸ்தலர்கள் மாளிகையின் கிளெமென்ரைன் மண்டபத்தில் மதகுருக்கள் மற்றும் பிரமுகர்களின் வணக்க அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தது. (செய்தி 3ஆம் பக்கத்தில்)

## மட்டக்களப்பில் அடைமழை: சுனாமி அகதிகள் அவலம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் அடைமழையினால் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களில் தங்கியுள்ள சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு சிரமங்களையும் இன்னல்களையும் எதிர்நோக்கி உள்ளனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மழை பெய்து வருகிறது. தற்போது தற்காலிக கொட்டில்களிலும் கூடாரங்களிலும் தங்கியுள்ள ஆழிப்பேரலை அகதிகள் மற்றுமொரு பாதுகாப் பான இடங்களை நோக்கிச் செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே இவர்களுக்கான தற்காலிக குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள இடங்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தாக்குதல்: மட்டக்களப்பில் விசாரணை

### இன்று முதல் ஆரம்பம்

ஏறாவூர்.ஏப்.4

கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் மீது அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் கட்ட விசாரணைகள் இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிமன்ற வளாகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இந்த விசாரணைகள் இடம்பெறவுள்ளன என்று ஆணைக்குழுவின் செயலாளர் ஏ.ஆர்.எம். கலீல் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. நிறைவேற்று அலுவலர் இன்று முதல் தொடர் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ். பல்கலைக்கழகத்தின் நிறைவேற்று அலுவலர்கள் இன்று திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பதிவாளரை மீண்டும் பணியில் இணைத்துக்கொள்வதென்று கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் -

ஆனால் அதனை நடைமுறைப்படுத்தாமல் நிர்வாகம் இழுத்தடிப்புச் செய்வதாகவும்-

இதனைக் கண்டித்தே வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளதாகவும்-

பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## அமெ.காங்கிரஸ் உறுப்பினருக்கு பிரபாகரனின் நினைவுப் பரிசு

கிளிநொச்சி வந்த அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர் டெனி கே. டேவிஸ் அவரது உதவிப் பணிப்பாளர் டெனி கென்ட்ரல் ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனின் நினைவுப் பரிசில் நேற்று வழங்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இரணைமடுவிலுள்ள விடுதியில் வைத்து பிரபாகரனின் நினைவுப் பரிசை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வழங்கினார்.

இதேவேளை - காங்கிரஸ் சபை உறுப்பினரும் அவரது உதவிப் பணிப்பாளரும் கிளிநொச்சியிலுள்ள தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புக்களையும் நீதிமன்றங்களையும் சட்டக் கல்லூரி, காவல்துறை பணிமனைகள் மற்றும் மாவீரர் துயிலும் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தனர்.

அதன்பின்னர் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் அவர்கள் தரைமார்க்கமாக கொழும்புக்குத் திரும்பினர். (ஓ-13)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமது 'டம்மி' வேட்பாளராக ரட்ணசிறியை நிறுத்தி, வென்றபின்னர் தாம் ஜனாதிபதியாகலாம் எனக் கனவு காண்கின்றார் சந்திரிகா!

## சிறையில் இருக்கும் எஸ்.பி. திஸநாயக்கா பேட்டி

பிரத்தியேகம்

**கேள்வி:** இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமான உங்களின் கருத்து என்ன?

**எஸ்.பி.:** நாட்டில் இன்று ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன, பொருளாதாரம் மிக வேகமாக சீரழிந்துகொண்டு வருகிறது. வாழ்க்கைச் செலவு வீதமும் மிகத் துரிதமாக உயர்ந்து வருகிறது. ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் பெருமளவானோர் அகதிகளாகியிருக்கின்றனர். இதற்கிடையே நாட்டின் செயற்றிறன் இன்மை, ஊழல், மோசடிகளும் கூடுதலான வகையில் இடம்பெற்றுவருகின்றன. அரசிற்குள் இருக்கவேண்டிய ஒருமைப்பாடு, ஒற்றுமை மிகவும் துரதிர்ஷ்டவசமான முறையில் சீர்குலைந்திருக்கின்றன. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசினால் எந்தவோர் இணக்கப்பாட்டிற்கும் வரமுடியவில்லை, அரசு பொருளாதாரத் துறையில் தனியார்மயம், மறுசீரமைப்பு போன்றவற்றிலும் ஒரு தீர்மானத்தை எடுக்க முடியாத நிலைமையே இருக்கிறது.

இவற்றிறகெல்லாம் மேலாக ஆழிப்பேரலையால் வடக்கு - கிழக்கு மக்களே கூடுதலாகப் பதிக்கப்பட்டனர் என்பதை நாம் அறிவோம். அந்த மக்களுக்கு நிவாரணத்தை வழங்கப் பொதுக் கட்டமைப்பொன்றை உருவாக்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஜனாதிபதி சற்று முயற்சிக்கின்றார் என்பது எனக்குத் தெரிகிறது. பொருளாதாரத்தை முன்னேற்றவும் அவர் முயல்கிறார். சர்வதேச அழுத்தங்களினால் இதனைச் செய்யமுடியாத நிலை இருக்கலாம். ஆனாலும் அவரால் ஒன்றும் செய்யமுடியாது. இதற்கிடையில் பொய், ஊழல், ஏமாற்றுதல் போன்றவற்றின் மூலம் நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்ல அரசு முயல்கிறது. இவை அனைத்துக்கும் மத்தியில் சந்திரிகா அம்மையார் தனது பதவிக் காலத்தை நீடிக்கவும், அதிகாரத்தில் இருப்பது குறித்தும் சிந்தித்து வருகிறார். எனவே, நாட்டின் அரசின் பொருளாதாரத்தின் நிலைமை மேலும் கீழ் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

### பொதுக் கட்டமைப்பை முதலில் ஏற்படுத்துங்கள்

**கே.:** தற்போதைய அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு எவ்வாறான தீர்வொன்றைக் காணலாம்?

**எஸ்.பி. :** முதலாவதாக, இன்று அகதி முகாம்களிலுள்ள மக்களின் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். அரசிற்கு இதற்குப் பலம் இருக்கிறது. அரசுக்கு நிதி உதவிகள் கிடைத்திருக்கின்றன. செலுத்தப்படவேண்டிய வெளிநாட்டுக் கடன்களுக்காக கால அவகாசம் கிடைத்திருக்கிறது.

சில கடன்களுக்கான வட்டி நீக்கப்பட்டுள்ளது. எனவே சிறந்த முகாமைத்துவம் ஒன்றின் மூலம் மக்களின் பிரச்சினைகளை முதலில் தீர்க்கவேண்டும். மக்களுக்கான வீடமைப்பு மற்றும் நிவாரண செயற்பாடுகளை மேற்கொள்ள அரசிடம் நிதி இருக்கிறது. ஆனால், எதுவுமே செய்யப்படுவதில்லை. சந்திரிகா அம்மையாரின் திட்டமெல்லாம் அடுத்த தேர்தலொன்றுக்குச் செல்வதுதான்.

இதனால்தான் ஆழிப்பேரலை அனர்த்தத்திற்காகக் கிடைத்த நிதி மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கிராமங்களில் வீதித் திருத்தப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, முதன் முதலில் பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்தி இந்த நிதி மக்களைச் சென்றடையக்கூடிய வழிவகைகள் உருவாக்கப்படவேண்டும். சந்திரிகா அம்மையார் மிகவும் துரதிர்ஷ்டவசமான வகையில் இவை அனைத்தையும் கட்டி அணைத்துக்கொண்டிருக்கிறார்.

**கே :** பொதுக்கட்டமைப்பொன்றை விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தும் முயற்சி ஏன் தாமதப்படுகிறது. இதை ஏன் அமைக்கமுடியாமல் உள்ளது.

**எஸ்.பி.:** வடக்கு - கிழக்கில் பொதுக் கட்டமைப்பொன்று உருவாக்கப்படுவதை ஜே.வி.பியினர் முற்றாக எதிர்க்கின்றனர். ஜே.வி.பி. என்பது முற்றுமுழுதான இனவாதக் கட்சி. இன்று விடுதலைப் புலிகளை ஜே.வி.பியினர் விரல் நீட்டிப் பேசுகின்றனர். புலிகள் ஆயுதங்களைத் தூக்கமுன்னர் இவர்கள் ஆயுதம் ஏந்தினர். விடுதலைப் புலிகள் பௌத்த குருமாரைக் கொல்ல முன்னர் இவர்கள் பௌத்த குருமாரைக் கொன்றனர். பௌத்த விகாரைகளை புலிகள் தாக்கமுன்னரே ஜே.வி.பி. விகாரைகளைத் தாக்கி இருந்தது. புலிகள் வங்கிகளைக் கொள்ளையிட முன்னரே ஜே.வி.பி. வங்கிக் கொள்ளைகளில் ஈடுபட்டது. எனவே, யார் புலிகள் பக்கம் விரல் நீட்டிப் பேசினாலும் ஜே.வி.பியினருக்கு அதைச் செய்யத் தகுதி இல்லை. செயற்றிட்டம், நோக்கம் போன்ற ஒன்றுமில்லாமல் வெறுமனே ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்தில் சந்திரிகாவை ஜே.வி.பி. மிரட்டிவருகிறது. எனவே, அரசின் இணக்கப்பாடு இல்லாத நிலையில் எப்படி எதனையும் செய்யமுடியும்.

**கே.:** அப்படியானால் பொதுக் கட்டமைப்பு என்பது சாத்தியமாகாதா?

**எஸ்.பி.:** எம்மைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்குகிறது. இப்போதைக்கு இது செய்யப்பட்டிருக்கவேண்டும்.

இதற்காக நாம் அரசைக் கவிழ்க்க மாட்டோம். எவ்வாறாயினும் இதனை அமைப்பதற்கான சக்தி அரசிற்குள் இல்லை.

### தமிழர்கள் இனிமேலும் ஏமாறமாட்டார்கள்

**கே:** சரி. அப்படியாயின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இப்போது எவ்வாறான நடவடிக்கையை எடுக்கலாமெனக் கருதுகிறீர்கள்?

**எஸ்.பி.:** முதலில் இதில் ஆரம்பிப்போம். ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி, அதனூடாக இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுக்களை ஆரம்பித்து, சமஷ்டி முறையிலான தீர்வொன்றுக்குச் செல்லலாம். இதுவொரு பெரிய வேலையல்ல. நாம் இன்னும் அடித்தளத்தில் இருக்கிறோம். இப்போது யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதிக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகளுக்கு விடுதலைப் புலிகளும் அரசுக்கு அரசும் தமக்குள் நேர்மையாகச் செயற்படவேண்டும். அதே போல் அரசிற்குப் புலிகளும், புலிகளுக்கு அரசும் நேர்மையாக இருக்கவேண்டும். ஆனாலும், இதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் கருணாவைப் பயன்படுத்தி இனப்பிரச்சினையை 'கோலிக்குண்டு' விளையாட்டாக மாற்றுவதற்கு அரசிற்கு எந்த உரிமையும் இல்லை. கருணா அரசின் கீழ் இருக்கிறார். அரசின் பாதுகாப்பில் இருக்கிறார். கிழக்கில் நடைபெறும் சம்பவங்களுக்கு அரசிற்குத் தொடர்பு உண்டு. இது விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் அரசின்பால் சந்தேகத்தை - அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு 2000 ஆண்டு வரலாறு இருக்கிறது. எமக்கிடையே சந்தேகம் இருக்கிறது. 1905ஆம் ஆண்டிலிருந்து அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வது பற்றியும், சமஷ்டி முறை குறித்தும் வடக்கு - கிழக்கிற்குத் தனியான நிர்வாகமொன்றை வழங்குவது பற்றியும் பேசப்பட்டு வந்திருக்கிறது. இறுதியில்தான் 1973ஆம் ஆண்டில் ஈழம் என்ற போராட்டம் தலைதூக்க ஆரம்பித்தது. ஒன்றிலுமே தீர்வு இல்லாத காரணத்தினால்தான் இந்த நிலை ஏற்பட்டது. எப்போதும், நாட்டின் தேசிய அரசியல் கட்சிகள் இனவாதத்தையே தூண்டின. தங்களின் நன்மைக்காக இதனைச் செய்தன. எனவே, நாளையே இனப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம். முதலில் ஒருவருக்கொருவர் நேர்மையுடன் செயற்படவேண்டும். பகிரங்கமாகவும் எந்த மோசடியின்றியும் செயற்படவேண்டும். இந்நாட்டின் வரலாற்றில் தமிழர்கள் போதுமானளவுக்கு ஏமாற்றப்பட்டுள்ளார்கள். எனவே, அவர்கள் மீண்டும் ஏமாறமாட்டார்கள். இந்தப் பக்கம் இடைக்கால நிர்வாகம் குறித்தும், பொதுக்கூட்டமைப்புக் குறித்தும் பேசிக்கொண்டு மறுபுறம் கருணாவுடன் என்ன தொடர்பு? இது அரசியல் காடைத்தனம். அரசிற்கு காடைத்தனம் செய்யும் எந்த உரிமையுமில்லை. சந்திரிகா செய்யும் இந்த அரசியல் காடைத்தனத்தினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. 2000 வருடம் பழமை வாய்ந்த - நூறு வருடகாலம் தீர்க்கப்படாத - 25வருட கருணகடூர யுத்தம் இடம்பெற ஏதுவாக இருக்கும் - ஒரு பிரச்சினையை அரசியல் காடைத்தனத்தினால் தீர்க்கமுடியாது. நேர்மையாக அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது குறித்து முதலில் பேசவேண்டும். ஒருபுறம் நோர்வேயை ஏசுகின்றனர். மறுபுறம் அவர்களை வருமாறு கூறுகின்றனர். கதிர்காமர் நினைப்பதுபோல் இப்போது சந்திரிகா நினைப்பதில்லை. சந்திரிகா, கதிர்காமர் நினைப்பதையல்ல மங்கள சமரவீர நினைக்கிறார். இவர்கள் மூவரும் நினைப்பதையல்ல பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நினைக்கிறார். இவர்களுக்கெல்லாம் அப்பால் மிகவும் மோசமான முறையிலேயே ஜே.வி.பி. நினைக்கிறது.

### சந்திரிகாவின் திட்டம்

**கே:** இப்போதைய அரசியல் சூழ்நிலையில் பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. அரசமைப்புத் திருத்தம், சர்வஜன வாக்கெடுப்பு, நாடாளுமன்றத் தேர்தல் இப்படிப் பல விடயங்கள் கூறப்படுகின்றன. உண்மையில் என்னதான் நடக்கப் போகிறது? ஜனாதிபதி சந்திரிகா என்ன தீர்மானத்தை எடுப்பார்?

**எஸ்.பி.:** இது மிகவும் தெளிவானது சந்திரிகா அம்மையாருக்கு இப்போதைக்கு சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்லமுடியாது. அப்படிச் செல்வதாயின் அவருக்கு நூறு கொம்புகள் இருக்கவேண்டும். அரசியல் ரீதியான கொம்புகள் அவருக்கு இல்லை. அரசியல் ரீதியான தந்திரோபாயம், துளியளவு அச்சமின்மை, வெட்கமின்மை என்பதுதான் சந்திரிகா அம்மையாரின் அரசியல் வெற்றிக்கான காரணங்களாகும். இன்னும் ஐந்து வருடங்களுக்கு அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் தேவைப்படின் சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு சந்திரிகா அம்மையார் செல்லவேண்டும். இதை நாட்டின் மத்தியவர்க்க மக்கள் நன்கு அறிவர். இந்த நடவடிக்கையை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விரும்பவில்லை அவருக்கு நெருக்கமானவர்களுக்கும் அதில் விருப்பமில்லை.

சந்திரிகா தொடர்ந்தும் பதவியில் இருக்க வேண்டுமென்று நான்கு பேரே விரும்புகின்றனர். சந்திரிகா, ரட்ணசிறி, மங்கள சமரவீர, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகிய நான்கு பேருக்கே இந்த விருப்பம் உள்ளது.

அனுரா வோறோர் இடத்திலிருக்கின்றார். சந்திரிகா விலகி அந்த இடம் தனக்குத் தரப்படவேண்டுமெனக் கூறுகிறார் அனுரா. சந்திரிகா அம்மையார் ஓய்வுபெற்றுச் சென்றுவிட வேண்டுமென்பதுதான் அந்தக் கட்சிக்குள் பெரும்பான்மை அபிப்பிராயமாக இருக்கிறது. பொரும்பாலான பிரதியமைச்சர்களை அவர் வேலைசெய்ய விடுவதில்லை எனக் கருதுகின்றார்கள். நிறைய அமைச்சர்கள் வெறும் காகிதப் பொம்மை அமைச்சர்களாகத்தான் இருக்கின்றனர். நூற்றுக்கு 90 வீதமான அமைச்சர்களின் நிலை இதுதான். நிதியமைச்சரைப் பற்றிக் கூறப்போனால் அவர் செயலாளர் பி.பி. ஜயசுந்தரவின் பியோனுக்குச் சற்றுக் கீழே இருக்கிறார். சமுர்த்தி அமைச்சர், சமுர்த்தி அமைச்சுச் செயலாளரின் சாதரணத் தொழிலாளிபோல் இருக்கிறார். அனைத்து அதிகாரங்களும் அம்மையாரின் கைகளில் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் ஊழல் மோசடிகள். ஜனாதிபதி நிதியத்தில் மோசடி, டெண்டர் விற்பனையில் மோசடி, கோடிக்கணக்கான ஒப்பந்தங்களை ஒவ்வொரு நாடுகளுக்கு வழங்குவது என்று பல ஊழல்கள், இவற்றினுள் பில்லியன் கணக்கிலான மோசடிகள் உள்ளன. இவற்றுக்கெல்லாம் சந்திரிகா அம்மையார் பதில் கூறவேண்டும். இவையெல்லாம் அமைச்சர்கள், எம்.பிக்களுக்குத் தெரியும். ஜனாதிபதி வெளியேறி மஹிந்த ராஜபக்ஷ போன்ற எவராவது

(16ஆம் பக்கம் பார்க்க)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்ட முடிவுகள்

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்துக்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டப் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் சென்.நீகசிலஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றுள்ளன. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணியும் மணற்காடு அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

இரண்டு அணியினரும் ஆட்டநேரத்தில் 1:1 என்ற கோல் பெற்றதினால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன இதில் மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியும் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின. இரண்டு அணியினரும் ஆட்டநேரத்தில் கோல் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் சென்.நீக்கிலஸ் விளையாட்டு கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது. (ஓ-86-190)

# பன்றித்தலைச்சி வரும் பக்தர்கள் நகைகள் அணிவதைக் குறைக்கவும்

## பாதுகாப்பு அதிகாரிகள் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.4

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் இன்று நடைபெறும் பங்குனித் திங்கள் உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்கள் குறிப்பாகப் பெண்களும் சிறுமிகளும் தங்க நகைகள் அணிவதை முடிந்தவரை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதிக நகைகள் அணிவது திருட்டுக்கள் நடப்பதற்கு வாய்ப்பளிக்கும். எனவே, பக்தர்கள் நகைகள் அணிந்து வருவதை பெரும்பாலும் தவிர்த்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு ஆலய சூழலில் விசேட பணியிலுள்ள அரச அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

கடந்த பங்குனித் திங்கள் உற்சவத்தின் போது பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையால் பக்தர்கள் மிகவும் அவதானத்துடனும் விழிப்புடனும் இருக்குமாறு அந்த அதிகாரிகள் மேலும் கேட்டுள்ளனர்.(ஓ-13-31)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.4

நயினாதீவு தெற்கு அருள்மிகு விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

திருவிழாக்காலங்களில் தினமும் இரவு 8மணிக்கு வலிகாமம் கல்விவலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்தசத்தியதாசன் 'விநாயக வழிபாடு' என்னும் பொருளில் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஐ-13-203)

★ ★ ★

பங்குனித்திங்கள் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை விசேட பொங்கல் பூசைகள் இடம்பெறவுள்ளன.

வருடந்தோறும் நடைபெற்றுவரும் இந்தப் பொங்கல் நிகழ்வில் அம்பாளுக்கு விசேட அபிசேகம், பூசைகள் என்பன இடம்பெறவுள்ளன. (ஐ-152-203)

★ ★ ★

முழங்காவில்,ஏப்.4

குமுழமுனை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பங்குனித்திங்கள் உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு திங்களும் ஆலயத்தில் விசேட பூசைகள், அபிஷேகங்கள் என்பன நடைபெறுகின்றன. (ஐ-323-203)

★ ★ ★

முழங்காவில்,ஏப்.04

கிராஞ்சி பட்டியன் மோட்டை ஸ்ரீ அன்னை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம் நடைபெற்று வருகின்றது.

நான்காம் திங்களான இன்றும் கடைசித் திங்களான எதிர்வரும் 11ஆம் திகதியும் விசேட பூசைகள் நடைபெறவுள்ளது. (ஐ-323-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.4

ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தில் அம்பாளுக்கு திருக்குளிர்த்திப் பூசை இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-204)

வலிகாமம்தெற்கு,ஏப்.4

ஏழாலை மத்தி அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலயத்தில் வருடாந்த பங்குனித் திங்கள் உற்சவம், பங்குனி உத்தரத் திருவிழா, தீக்குளிர்த்தி என்பன தற்போது நடைபெற்று வருகின்றன.

இன்றைய பங்குனித் திங்கள் உற்சவம் விசேட பொங்கல் பூசைகளுடன் நடைபெறவுள்ளது.

இந்தப் பங்குனித்திங்கள் உற்சவத்தின் இறுதிநாளான எதிர்வரும் 11ஆம் திகதி வருடாந்த தீக்குளிர்த்தியும் மாகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளன. (ஐ-152-203)

★ ★ ★

குடத்தனை,ஏப்.4

புலோலி மேற்கு, வாணர் குடியிருப்பு சொக்கன்கலட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நாளை செவ்வாய்க்கிழமை இரவு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மறுநாள் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு விசேடபூசைகள் இடம்பெற்று பொங்கல் விழா நிறைவடையும். (ஐ-78-203)

★ ★ ★

துன்னாலை வல்லியானந்தம் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த மாதம் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 7ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஐ-173-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.4

நவக்கிரி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஐ-203)

# உலகெங்கும் கத்தோலிக்கர்கள் துக்கம்!

## வத்திக்கான் முழுவதும் சோகத்தில் லட்சக்கணக்கானோர் அஞ்சலி

ரோம்,ஏப்.4

பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பர் தனது 84 ஆவது வயதில் மரித்ததையடுத்து உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் துக்கம் அனுஷ்டிக்கின்றனர். வத்திக்கானில் லட்சக்கணக்கானவர்கள் கூடி பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தினர். வத்திக்கான் முழுவதும் சோகமயமாகத் திகழ்கின்றது.

இத்தாலிய அதிகாரிகளும் வத்திக்கான் மதப் பிரதிநிதிகளும் மறைந்த பாப்பரசருக்கு தமது மரியாதைகளைச் செலுத்தினர். பாப்பரசரின் பூதவுடல் அஞ்சலிக்குத் தயார்ப்படுத்தப்பட்டு வத்திக்கானில் வைக்கப்பட்டுள்ளது. இன்று மக்கள் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்படுவர்.

ரோமில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு முதல் (இலங்கை நேரப்படி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை) வத்திக்கானில் உள்ள சென்.பீற்றர்ஸ் தேவாலய சதுக்கத்தில கூடிய ஒரு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் கைகளில் மெழுகுவர்த்திகளை ஏந்தியபடி அஞ்சலி செலுத்தினர். கதறி அழுதனர். பாப்பரசருக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

ரோம் நேரப்படி சனிக்கிழமை இரவு 9.37 மணிக்குப் பாப்பரசர் மரித்தார் என்ற செய்தி அறிவிக்கப்பட்டது. சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் ஏற்கனவே கூடியிருந்த மக்கள் கூட்டம் மௌனமாக அந்தச் செய்தியைக் கேட்டது. பின்னர் வாய்விட்டுக் கதறி அழுதது.

"இது, எனது தந்தை இறந்ததற்குச் சமனானது. அவரது இழப்பால் ஆழ்ந்த துக்கமும், வெறுமையும் ஏற்பட்டுள்ளது" - என்றார் சதுக்கத்தில் கூடியிருந்த 28 வயதான மாரியோ டிலுக்கா.

பாப்பரசரின் மறைவையொட்டி இத்தாலிய அரசு நாட்டில் மூன்று நாள்கள் துக்கதினம் அறிவித்துள்ளது. இந்தவாரக் கடைசியில் நடைபெறவிருந்த அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. நாட்டின் உயர்நிலை விளையாட்டு அமைப்பான ஒலிம்பிக் குழு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

இதனால், பெரும் கால்பந்து ஆட்டங்கள், இத்தாலிய ஐஸ் கொக்கி பட்டப் போட்டி, கூடைப் பந்தாட்டங்கள், கரபந்தாட்டம் என்பன முக்கிய கட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. கார்ப்பந்தயங்களும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

பாப்பரசரின் இறுதிச்சடங்குகள் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியாகவில்லை. இன்று அது வெளியாகலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் இறுதிச்சடங்குகள், மரபுப்படி எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுப்பதற்காகவும், இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காகவும் அநேகமாக அனைத்துக் கர்தினால்களும் வத்திக்கான் வந்து சேர்ந்துவிட்டனர். இன்னும் 20 நாள்களுக்குள் அவர்கள் புதியவரை உடனடியாகத் தெரிவுசெய்யவேண்டும். அவர்களின் ஆரம்பக் கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

## 2 பேராயர்கள் நியமனம் வத்திக்கான் அறிவிப்பு

வத்திக்கான்,ஏப்.4

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் உடல்நிலை மோசமடைவதற்கு முன்னதாக அவர், இரண்டு பேராயர்களையும், இரு வெளிநாட்டுத் தூதுவர்களையும் நியமித்துள்ளார் என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.

உலக அரங்கில்

இந்த முடிவை கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதியில் பாப்பரசர் எடுத்தார் என வத்திக்கான் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எல்சல்வடோர் நாட்டின் தூதுவராக பேராயர் லூகி பெஸ்ஸட்டோவும், பனாமா நாட்டுத் தூதுவராக கியாம் பட்டிஸ்டா டிகுவாட்ரோவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு ஸ்பெயின் நாட்டில் ஜோரகோவாவின் பேராயரும், ஆர்மினியாவின் கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-க)

## சுமாத்திராவில் நேற்றும் நில அதிர்வுகள்

இந்தோனேஷியாவின் சுமாத்திராத் தீவின் மேற்குக் கடலோரப் பகுதியில் நேற்று அதிகாலை நில அதிர்வுகள் ஏற்பட்டன.

இலங்கை நேரப்படி 4.18 மணியளவில் முதலாவது நில அதிர்வு ஏற்பட்டது. இது 5.2 புள்ளி ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது.

இரண்டாவது நில அதிர்வு இலங்கை நேரப்படி 6.59 மணிக்கு ஏற்பட்டது. இது 5.7 புள்ளி ரிச்டர் அளவாகப் பதிவானது.

மூன்றாவது நிலநடுக்கம் காலை 9.11 மணிக்கு ஏற்பட்டது. இது 6.1 புள்ளி ரிச்டர் அளவில் பதிவானது.

தொடர்ந்து இடம்பெற்ற நில அதிர்வுகளினால் மக்கள் பீதியடைந்தனர்.

நேற்றுமுன்தினம் நில அதிர்வு ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 5 புள்ளியாகப் பதிவாகியிருந்த இந்த நில அதிர்வு, எவ்வித உயிர்ச்சேதத்தையோ, பொருள்சேதத்தையோ ஏற்படுத்தவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-க)

## ஈராக் அபு –கிரைப் சிறைச்சாலை மீது கிளர்ச்சிவாதிகள் பெரும் தாக்குதல்!

### *20 அமெரிக்கச் சிப்பாய்களும், 12 கைதிகளும் படுகாயம்*

ஈராக் தலைநகர் பக்தாத்தின் புறநகர் பகுதியில் அமைந்துள்ள அபு-கிரைப் சிறைச்சாலையைச் சுற்றிவளைத்து கிளர்ச்சிவாதிகள் பலர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இரண்டு கார்க் குண்டுகளை வெடிக்கவைத்தும், ரொக்கட் தாக்குதல்களை நடத்தியும் கிரனேட்டுக்களை வீசியும் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இத்தாக்குதலில் சுமார் 20 அமெரிக்கத் துருப்பினர்களும் 12 கைதிகளும் படுகாயமடைந்துள்ளனர் என்று அமெரிக்க இராணுவம் அறிவித்துள்ளது.

40 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட கிளர்ச்சிவாதிகளைக் கொண்ட குழுவினரே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என அபு -கிரைப் சிறைச்சாலையின் பேச்சாளர் கேணல் கேய்ருடிகில் ரோய்ட்டர் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

அமெரிக்கத் துருப்பினர் பதில் தாக்குதல் நடத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்த மோதலின்போது எத்தனை கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டனர் என்பதையும் காயமடைந்துள்ளனர் என்பதையும் குறிப்பிட முடியாதுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களிலும் இதுபோன்ற தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்த போதிலும் கடைசியாக நடத்தப்பட்ட தாக்குல்களில் இதுவே பாரிய தாக்குதல் என பக்தாத் இராணுவ வட்டாரச் செய்திகள் தெரிவித்துள்ளன.

அபு-கிரைப் சிறைச்சாலையில் இப்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சிறைச்சாலை அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காயமடைந்த கைதிகள் பக்தாத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

காயமடைந்த 20 அமெரிக்க இராணுவத்தினரும் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர் என்றும் - 44 அமெரிக்கப் படையினரும் 12 கைதிகளும் படுகாயமடைந்தனர் என்றும் - பக்தாத்திலிருந்து வெளியான மற்றொரு செய்திக்குறிப்பு தெரிவித்தது. ஆனால், இத்தகவலை அமெரிக்க இராணுவத் தரப்பு உறுதிசெய்யவில்லை. (ஐ-க)

## சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கு 7 கோடி மட்டுமா! மீதிப்பணம் எங்கே?

### கேள்வி எழுப்புகிறார் இந்திய முன்னாள் நிதியமைச்சர்

சென்னை,ஏப்.4

சேது சமுத்திரத் திட்டத்திற்கு இந்திய அரசு வரவு - செலவுத் திட்டத்தில் ஏழு கோடி ரூபாவை மட்டுமே ஒதுக்கீடுசெய்துள்ளது. தேவைப்படும் மீதிப் பணத்திற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான தெளிவான விவரங்கள் இந்திய அரசால் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சரும், பா.ஜ.கவின் மூத்த தலைவருமான ஜஸ்வந்த் சிங்ஹா.

சென்னையில் தொழில் வர்த்தகக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற பொருளாதாரக் கொள்கை மற்றும் பொருளாதார வளர்ச்சி, என்னும் தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய மத்திய அரசு தாக்கல் செய்த பட்ஜெட்டில் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கு வெறும் ஏழு கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களை வேறு வழிகளில் திரட்டப்போகிறது என்பது குறித்து மத்திய அரசு தெளிவாக எதுவும் குறிப்பிடவில்லை. வங்கிகளில் கடன் பெறப்போகிறதா என்பது குறித்தும் தெளிவாக்கப்படவில்லை.

நாடு பொருளாதாரச் சீர்திருத்தம் அடைய வேண்டுமெனில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும், அரசியலுக்கு அப்பாற்பட்டு அனுசரித்துச் செல்லவேண்டும். ஆனால், எதுவும் நடப்பதில்லை. பொருளாதார சீர்திருத்தங்கள் குறித தான விடயங்களில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் எவ்வித விவாதங்களையும் நடத்துவதில்லை.

இவ்வாறு ஜஸ்வந்த் சிங்ஹா பேசினார். கருத்தரங்கில் சென்னை தொழில் வர்த்தகக் கூட்டமைப்புத் தலைவர் முரளி வெங்கட்ராமன் மற்றும் பொருளாதார நிபுணர்கள் பலர் கலந்துகொண்டனர். (ஐ-க)




## வத்திக்கானில் பாப்பரசருக்கு அஞ்சலி












# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட நல்ல நிலையிலுள்ள Window Type A/C (Fried Rich), அழகிய வண்ண Carpet விற்பனைக்குண்டு. தொடர்பு: யோகராஜா (கிளி) T.P.: 077 6034090 உப்புமடச் சந்தி, கோண்டாவில் மேற்கு. (43793)

மோட்டோ றோலா தொலைபேசி விற்பனைக் குண்டு. தொடர்பு: 077 - 6138493. (43785)

## கடை விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் 37அடி நீளமும் 13 அடி அகலமும் கொண்ட கடை விற்பனைக்கு உண்டு. தொடர்பிற்கு: 0773144868, 021 4590275. (43755)

## பராமரிப்பாளர் தேவை

சம்பந்தன் கடையடி, கரவெட்டி மத்தி, யாழ்ப் பாணத்தில் வசிக்கும் வயோதிபர் ஒருவரைப் பராமரிப்பதற்குத் தகுந்த பராமரிப்பாளர் தேவை. தொலைபேசி மூலமாகவோ அல்லது கீழ்க்கண்ட விலாசத்திற்கோ தொடர்புகொள்ள வும். மேலதிக தொடர்புகளுக்கு: திரு.S.சோம சுந்தரம், சம்பந்தன் கடையடி, கரவெட்டி மத்தி, யாழ்ப்பாணம். T.P.: 0777 671551 or 021 226 3772. (சி-41975)

## தேவை

ரெலிபோன் ஒன்று தேவை. தொடர்புகளை வைத்திருப்பவர் Suntel, SLT எதுவாயினும் விற்க விரும்பினால் உடன் தொடர்புகொள்ள வும். தொடர்பு: 077 6363642. (43778)

## தவறிவிட்டது

வெற்றிலைக்கேணி, முள்ளியானைச் சேர்ந்த, ஜெயசிங்கம் தர்மிந்தன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.853230944V) மணிக்கூண்டு வீதிக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள வும். 077 9004465, 021 222 6183. (43807)

மறவன்புலோ மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை துஸ்யந்தி என்பவரது தேசிய அடையாள அட்டை கிழக்குக் கோண்டாவில் சந்திக்கும் மேற்குக் கோண்டாவில் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் 021 - 222 3524 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (43808)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நம்பர் 1 பகிரா Prima புறொயிலர் குஞ்சுகள் 06.04.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். Prima Broiler 40/= றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. P.ரவி, சாவகச்சேரி. மதுரா 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம். தாரகை, முதலாம் கட்டை, பருத்தித் துறை. றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட். ராதா, மாவடி, வட்டுக்கோட்டை. ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. T.P.: 222 3529, 222 2867. (43803)

---

# இலவசம்

## இளைஞர்களுக்கான பயிற்சி

150 நாடுகளில் பயிற்சி நடத்தும்

(வாழும் கலைப்பயிற்சி அறநிலையம் இந்துகலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது)

இதில் கிடைக்கும் பயன்கள்:

- ★ மன இறுக்கம், மன உளைச்சல் நீக்கி, ஆத்ம சக்தியை உணர்ந்து ஆன்மீகவழியில் ஊக்கம் கொண்டு செவ்வனே பணிசெய்ய
- ★ நினைவாற்றல் பெருக
- ★ உடல் ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் பெற
- ★ நேர்மை, வாய்மை, மனிதநேயத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள

18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இருபாலருக்கும் 16.04.2005 ஆம் திகதி முதல் 22.04.2005 ஆம் திகதிவரை 7 நாள்களுக்கு காலை 7.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை. இலவச காலை, மதிய, மாலை உணவுடன் யாழ்.நகர், சுழிபுரம், பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய நான்கு முகாம்களில் பயிற்சி நடக்கும். குறைந்த இடமே உள்ளதால் இலவச அனுமதிச் சீட்டு பெற்றுக்கொள்ள உடன் தொடர்புகொள்ள:

**பதிவு இடம் நேரம்**

| | |
|---|---|
| நாவலர் மணி மண்டபம், நல்லூர் (கந்தசுவாமி கோயில் எதிரில்) யாழ்ப்பாணம். தொ.பே.இல: 222 3893 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை | பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/வேலாயுதம் ம.வி., பருத்தித்துறை. காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை. திங்கள் முதல் வெள்ளி வரை. |
| 51, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.இல: 222 6048 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை | |

குறிப்பு: ஒவ்வொரு முகாமிலிருந்தும் திறமைமிக்க பத்து நபர்கள் மேற்பயிற்சிக்காக வெளிநாடு அனுப் பப்படுவர். பரீட்சை எதுவும் இல்லை. காலை, மதிய, மாலை உணவு இலவசம்.

---

# கனடாவில் தொழில் வாய்ப்பு

நிரந்தர வதிவுரிமையுடன் கனடாவில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் திட்டம் ஒன்றில் சேர்ந்துகொள்ளவிரும்பும் டிப்ளோமா அல்லது டிப்ளோமாவுக்கு மேல் கல்வித் தகைமையுடையோர் - இடைநிலைக் கல்வியுடன் தொழில்நுட்பத் தகைமைகள் பெற்றுத் தொழில்நுட்பத் தரங்களில் பணியாற்றுவோர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

**கே.அர். இன்**

பலாலி வீதி *(விவசாயப் பாடசாலை அருகில்)*,
☎ 222 5110. திருநெல்வேலி.

(43793)(26-14-45)

---

# புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை

இன்று முதல் எமது நிறுவனத்தில் பிரதியாக்கம் செய்யும் அனைத்து அளவுகளிலுமான போட்டோக்களை அனைத்து வாடிக்கையாளர்களும் கொழும்பு விலையில் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

**4 R - 9/=**

## மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

யாழ்.வீதி, மானிப்பாய்.
T.P. : 021 - 222 2884

(சி-41980)(26-14-45-261)

---

# ராஜகோபுர கும்பாபிஷேகம்

அரியாலை,ஏப்.4

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோயில் ராஜகோபுர கும்பாபிஷேகம் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஞ்சமுகப் பிள்ளையாருக்கான கோபுரத்துக்கும் முகப்பு ராஜ கோபுரத்துக்கும் கும்பாபிஷேகம் இடம் பெறும்.

அத்துடன், ஆலயத்தில் புனரமைக்கப்பட்ட கல்யாண மண்டபமும் இன்று திறந்துவைக்கப்படும். (ஐ-17)

---

# சிறுகுறி... சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். *தொடர்பு:*

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி (விவசாயப் பண்ணைக்கு எதிராக OPPOSITE FARM SCHOOL)
(43790) திருநெல்வேலி. T.P.: 021-4590907.

---

# வேலையாளர் தேவை

கொழும்பிலுள்ள பிரபல்யமான கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றிற்குப் பின் வரும் பதவிக்கான வெற்றிடங்கள் உள்ளன. அவற்றுக்கு ஆள்கள் தேவைப் படுகின்றனர்.

I ஊதுபவர்
II உதவியாளர்

ஊதியம் 10,000/= தங்குமிட வசதிகள் வழங்கப்படும். அனுபவமுள்ளவர்கள் மட்டும் பின்வரும் முகவரிக்கு காலை 9 மணிக்கும் 12 மணிக்குமிடையில் நேரில் சமுகமளிக்கவும்

**த.பெனின் சுலா குறூப்,**
518, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (43860)

---

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட கழிவு

- புதிய வடிவமைப்பில் நவீன கண்ணாடிகளைப் பெற்றிட....
- முக அமைப்புக்கேற்ப சங்குப் பற்களைப் பொருத்திட....
- மிதப்புப் பற்களுக்குக் கிளிப் பொருத்திட....



கைதேர்ந்த வல்லுநர்கள்

**விக் கணேஷ்**

பல்கட்டுமிடமும் மூக்குக்கண்ணாடியகமும்..
*564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,*
T.P.: 2486
கிளைகள்: சுன்னாகம்,கொக்குவில் சந்தி. (C/41985) (26-14-45)

---

# Dialog GSM டயலொக்

*100/-, 400/-, 1,000/-விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim இணைப்புக்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள*

எந்நேரமும் உன்னுடன்...!

**Sri Murugan**

Tele Communication
&Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna,
T.P.:21 222 5392 Fax: 222 3435.

(C/38165) (26-14-45)

---

# தேர் வெள்ளோட்டம் திகதி மாற்ற அறிவித்தல்

## காரைநகர் – மணற்காடு கும்பநாயகி அம்பாள் ஆலயச் சித்திரத்தேர் வெள்ளோட்டம்

மேற்படி ஆலயச் சித்திரத்தேர் வெள்ளோட்ட தினம் சில தவிர்க்கமுடியாத காரணங்களால் 07-04-2005 ஆம் திகதி வியாழக்கிழமை தினத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றேன்.


*குறிப்பு:* மேற்படி ஆலய சித்திரத் தேர்த் திருப்பணிக்கு என்னால் அனுமதிக்கப்பட்ட திருப்பணிச் சபை உறுப்பினர்களிடம் பணம் கொடுத்து இன்னமும் பற்றுச்சீட்டுப் பெறாத அடியார்கள், அன்பர்கள் தயவுசெய்து என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலயம்,
மணற்காடு, காரைநகர். (43811)(26-14-45)

பெற்றுநர்
(வே.நடராசா).

---

# வாழ்க! வளர்க!! வாழியவே!!!



சீர்மிகு நெல்லையிலே
வானுயர்
எழில் மிகு
குளுமை தரு
மெல்லொல் வரு
புது மனையாம்
சன் மாளிகையில்
புதுக்காட்சிப் பொலிவுடன்
புதுக்குடி புகும்

**செல்லமுத்து புடைவை மாளிகை**

வாழ்க!
வளர்க!!
வாழியவே!!!

அன்பன் க.புலேந்திரன்,
கலைமகள் ஒலியமைப்பாளர்,
அல்வாய். (சி-41981)(26-14-45)

---

# Direct Start

# புத்தாண்டு சிறப்பு சலுகை

- Diploma in MS Office (MSO)
- Diploma in Computer Studies (DICS)
- Diploma in Computer Programming (DCP)
- Diploma in Desktop Publishing (DTP)
- Diploma in Web Design (DWD)
- Diploma in Computerised Accounting (DCA)

அனைத்து பாடநெறிகளும் 3 – 4 மாதங்கள்



மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன்

இலவச பாடநூல்களும் குறிப்புகள்

**Select Any Course Pay 3,900/- only**

- முன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சின் அங்கீகாரம்
- 12 ஆண்டுகள் கணினி கல்விச் சேவையில் அனுபவம்
- இலவச பாடநூல்கள் குறிப்புகள் ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இடம் மாறி கற்கும் வாய்ப்பு
- ICM UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- கட்டணங்கள் தவணை முறையிலும் செலுத்தலாம்
- நவீன சமகால கணினி பாடநெறிகள்

# ASIAN COMPUTER SYSTEMS

| | | | | |
|---|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. ✆ 0773-122198 | கண்டி வீதி சாவகச்சேரி. ✆ 077-3039587 | கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. |

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# உயர்ந்த பாதையில் உலகை மேய்த்தவர்

ஆன்மீக உலகம் மற்றொரு மாமனிதரை - உத்தம புருஷரை - இழந்து சோகத்தில் மூழ்கியிருக்கின்றது.

உலகில் உள்ள சுமார் நூறு கோடி றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராகவும், ஆன்மீக வழிகாட்டியாகவும் திகழ்ந்த திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் உலக வாழ்வைத் துறந்து கர்த்தரின் மகிமைக்குள் நித்திய ஜீவிதமடைந்தார்.

27 ஆண்டுகளுக்கு முன்னர் திருத்தந்தையாக அவர் திருநிலைப்படுத்தப்பட்ட சமயம் அவர் தேர்ந்தெடுத்துக்கொண்ட 'அருளப்பர்' என்ற நாமத்துக்குப் பொருத்தமாக இரக்கமும், அருளும், அன்பும், ஊற்றெடுத்து ஒன்றாகத் தோற்றியவர் போல தமது வாழ்நாளை மனித சமூகத்துக்கு முன்மாதிரியாக அர்ப்பணித்த சாத்வீகி அவர்.

1981 இல் தன்னைச் சுட்டுக்கொல்ல முயன்ற மெஹ்மத் அலி என்ற துருக்கிய இளைஞனைக் கூட மன்னிக்கும்படி வேண்டி, தாம் காழ்ப்புணர்ச்சியற்ற இரக்க சிந்தனையாளன் என்பதையும் அதன் மூலம் புனித இயேசுபிரான் வழிகாட்டிச் சென்ற உயர்ந்த மதத்தின் உத்தம போதனையையும் அவர் நிரூபித்தார்.

சுமார் நாலரை நூற்றாண்டு காலத்தின் பின்னர் திருச்சபையின் தலைவராக இத்தாலியர் அல்லாத ஒருவர் தெரிவான பெருமை இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கே உரியது. இத்தாலியர் அல்லாதவர்களும் இப்பதவி நிலையைத் திறம்பட ஆற்ற முடியும் என்பதைத் தனது இரண்டரை தசாப்த கால உன்னத - உயர்நிலை - சேவையால் அவர் நிரூபித்தார்.

கம்யூனிஸ நாடாக இருந்த போலத்திலிருந்து இவ்வாறு ஆன்மீக ஒளி பிரகாசித்து எழுந்தமை அந்த நாட்டின் நாத்திக அரசு முறையின் கீழான ஆட்சிமுறைமைக்குச் சாவுமணி அடித்தது. அதனால், அப்படி ஆன்மீக ஒளியாகப் பிரவகித்த திருத்தந்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் பேசியவரல்லர். அரசியல் பேசாமலேயே தன் மக்களை நல்வழிப்படுத்தும் ஆன்மீக உணர்ச்சியை அவர்கள் மத்தியில் பிரவகிக்க வைக்க அவரால் முடிந்தது.

மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்காகத் திருச்சபை தலைமையில் அவர் முன்னெடுத்த விழிப்புணர்வு போற்றுதற்குரியது.

பல்வேறு இன, மொழி, நிற பேதங்களையும் பண்பாட்டு வேறுபாடுகளையும் பழக்க வழக்கப் போக்குகளையும் கொண்ட கோடிக்கணக்கான மக்களை றோமன் கத்தோலிக்க மதம் என்ற திருநூலினால் பிணைத்து வைக்கும் மைய நாராக விளங்கிய திருத்தந்தை அருளப்பர் சின்னப்பர். இந்தப் பணிக்காக உலகம் முழுவதும் இருபத்தியைந்து தடவைகளுக்குமேல் சுற்றியவர். இருபது ஆண்டுகளில் 117 நாடுகளுக்கு விஜயம் செய்து தமது நற்போதனைகளால் அந்தந்த நாட்டு மக்களை ஆகர்ஷித்து நல்வழியின்பால் திருப்பியவர்.

கத்தோலிக்கத் திருச்சபையில் பல புதிய சட்ட, திட்ட ஏற்பாடுகளைப் புகுத்திப் பல சீர்திருத்தங்களை அவர் செய்தாரெனினும் வழக்காறுகளைக் கைவிட மறுக்கும் - முற்போக்குச் சீர்திருத்தங்களுக்கு எதிரான பழமைவாதியாகவும் - சில தரப்பினரினால் அவர் விமர்சிக்கப்படத் தவறவில்லை.

குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஒரு படியாகக் கருக்கலைப்புச் செய்ய அனுமதிப்பது போன்ற விடயங்களை அவர் எதிர்த்தார். அதனாலும், கருணைக்கொலை, மரணதண்டனை, திருச்சபையின் குருவாகப் பெண்களைப் பணிபுரிய அனுமதித்தல் போன்றவற்றை எதிர்த்ததாலும் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். ஆனால், இந்த விடயங்கள் தொடர்பான தமது நிலைப்பாட்டில் திருத்தந்தை உறுதியாகவும் தெளிவாகவும் கருத்துத் தளம்பாமல் திடமாகவும் இருந்தார்.

பன்மொழிப் போதகரான இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் எட்டு மொழிகளில் புலமை பெற்றவர். சிறந்த எழுத்தாளரும் பேச்சாளரும்கூட. அத்திறமைகள் மூலம் மக்களைக் கவர்ந்து திருச்சபையின் வழிகாட்டல்களைத் தெளிவான தத்துவ ஏற்பாடுகள், வெளிப்பாடுகளோடு வெற்றிகரமாக முன்னெடுக்க அவரால் முடிந்தது.

இத்துணைச் சிறப்பாகப் பணியாற்றிய அந்த மேய்ப்பரின் வழியில் உலக கிறிஸ்தவ சமுதாயத்தைத் தொடர்ந்து வழிநடத்தப் போகின்றவர் யார்? அதனை அறிந்துகொள்ள உலகமே காத்திருக்கின்றது.

உலக கிறிஸ்தவர்களில் 65 வீதத்துக்கும் அதிகமானோர் ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

அவர்களில் ஒரு வழிகாட்டிக்கு ஆன்மீக உலகின் இந்த உயர்பதவி கிட்டுவது பொருத்தமானதாக இருக்கும் என்பதே பலரது அபிப்பிராயமாகும்.

# மோதல்கள், சீரழிவுச் செயல்களில் ஈடுபட்ட 12 இளைஞர்கள் சிக்கினர்

## அவர்களிடமிருந்து வாள்கள், கத்திகளும் பறிமுதல்



கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள், அவர்கள் பயன்படுத்திய கத்திகள், வாள்கள். (படங்கள் : எஸ்.சுந்தரலிங்கம்)

கரவெட்டி.ஏப்.4

உடுப்பிட்டிப் பகுதியில் அண்மைக் காலமாக கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டுவந்தவர்கள் என்று கூறப்படும் 12 இளைஞர்கள் அடங்கிய குழு ஒன்றை கலாசாரத்தைப் பேணும் குழுவினர் கண்டுபிடித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களை உள்ளடக்கிய இந்தக் குழுவினர் சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்டு விசாரணையின் பின்னர் வடமராட்சி அரசியற்றுறைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தக் கோஷ்டியினரிடம் இருந்து பல்வேறு ரகங்களைச் சேர்ந்த வாள்களும் கத்திகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த இளைஞர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு. அவர்களது பெற்றோர்களும் அழைக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

இளைஞர்களைப் பெற்றோர்களிடம் கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. பல்வேறு சீரழிவுச் செயல்களுக்கும், மோதல்களுக்கும் பயன்படுத்தப்பட்ட வாள்கள் உட்பட ஆயுதங்களும் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டன.

இனிமேல் இத்தகைய செயல்களில் ஈடுபடமாட்டோம் என்று இளைஞர்கள் பன்னிரெண்டு பேரும் உறுதியளித்தனர். (ஜ-70)

# யாழ். விஞ்ஞானச் சங்கத்தின் 13 ஆவது வருடாந்த மாநாடு

## பல்கலைக்கழகத்தில் 3 தினங்களுக்கு

யாழ்ப்பாணம்.ஏப்.4

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கம் நடத்தும் 13ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 6,7,8 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூல்நிலையக் கேட்போர்கூடம், பௌதிகவியல் விரிவுரை மண்டபம் ஆகியவற்றில் நடைபெறவிருக்கின்றது.

இந்த மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின், உயிரியல் இராசயன, அணுஉயிரியல், உயிரியல் தொழில்நுட்பத்துறைக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் எரிக் எச்.கருணநாயக்க அழைக்கப்பட்டுள்ளார்.

6ஆம் திகதி புதன்கிழமை பல்கலைக்கழக நூல்நிலையக் கேட்போர்கூடத்தில் காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகும் மாநாட்டுக்குப் பேராசிரியர் எஸ்.ராஜதுரை தலைமை வகிப்பார். பிரதம விருந்தினர் உரையும் தங்கப்பதக்கம் வழங்கலும் இடம்பெறும்.

பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கவுரையை நிகழ்த்துவார். தேநீர் இடைவேளைக்குப் பிறகு இடம்பெறும் நிகழ்வுகளில் டாக்டர் ஜெயம்பதி சமரக்கூன், டாக்டர் பி.லுக்குமார், செல்வி எஸ்.அருளானந்தம், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியவர்கள் பல்வேறு தலைமைகளில் உரைநிகழ்த்துவார்கள். கலந்துரையாடலும் இடம்பெறும். மதியபோசனத்துக்குப் பிறகு பேராசிரியர் திருமதி ஆர்.மகேந்திரன் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெறும். டாக்டர் என்.சிவயோகம், டாக்டர் எஸ்.மகேசன் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். மாலை தேநீருக்குப் பின்னர் பேராசிரியர் கே.கந்தசாமி தலைமையில் பேராசிரியர் ஆ.குமாரவடிவேல், டாக்டர் எஸ்.ரவிராஜ் ஆகியோர்களின் உரைகள் இடம்பெறும்.

ஏப்ரல் 7ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு டாக்டர் திருமதி எஸ்.சிவச்சந்திரனும் 10.30 மணிக்கு நூல்நிலைய கேட்போர்கூடத்தில் ஆரம்பமாகும் 'பி' பிரிவுக்குப் பேராசிரியர் வி.அருள்நந்தியும் தலைமை வகிப்பார்கள். இது மதியபோசனத்துக்குப் பிறகும் தொடரும். மாலை தேநீருக்குப்பிறகு நூல்நிலையக் கேட்போர் கூடத்தில் டாக்டர் கே.சிவபாலன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும். டாக்டர் எஸ்.நவநீதன் மீளாய்வு உரை நிகழ்த்துவார்.

ஏப்ரல் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நூலகக் கேட்போர்கூடத்தில் டாக்டர் பி. புஸ்பரட்ணம் தலைமையில் உரைகள் ஆரம்பமாகும். சாட்டி தொல்வியல் அகழ்வாய்வின் முக்கியத்துவம் பற்றியதாய் அவரது உரை அமையும். டாக்டர் ஏ. எஸ்.சூசை 'சேதுசமுத்திரத்திட்டமும் இலங்கையில் அதன் முக்கியத்துவமும்' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

தேநீர் இடைவேளைக்குப் பின்னர் பிரிவுசார் செயற்பாடுகள் பற்றிய கூட்டங்களும் வருடாந்த பொதுக்கூட்டமும் இடம்பெறும். இதில் ஏ,பி,சி,டி பிரிவு கூட்டங்கள் முறையே பௌதிக விரிவுரை மண்டபம் (1) நூலகக் கேட்போர்கூடம் நூலகக் கேட்போர்கூடம், பௌதிக விரிவுரை மண்டபம் (2) ஆகிய இடங்களில் நடைபெறும்.

11.45 மணிக்கு வருடாந்த பொதுக் கூட்டம், தலைவர் பேராசிரியர் எஸ்.ராஜதுரை தலைமையில் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (ப)

# கூட்டுறவுப் பெரியார் நினைவாக முத்திரை வெளியிடக் கோரிக்கை

அரியாலை.ஏப்.4

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்துக்கு நினைவு முத்திரை ஒன்றை அஞ்சல் திணைக்களம் வெளியிட்டு அவரைக் கௌரவிக்கவேண்டும்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அஞ்சல் ஆணையாளர் நாயகம் மற்றும் முத்திரை வெளியீட்டுப் பணிப்பாளர் ஆகியோருக்குக் கடிதம் ஒன்றை மாவட்டக் கூட்டுறவுச் சபை அனுப்பிவைத்துள்ளது.

புனிதமான கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பெரும்பான்மை இனமக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்று அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனத்தின் முதல் தலைவராக இருந்து வடக்கையும் தெற்கையும் இணைத்த கூட்டுறவுப் பாலமாகத் திகழ்ந்தவர் அமரர் வீரசிங்கம்.

எனவே, அவரைக் கௌரவிக்கும் முகமாக அவரின் நினைவாக முத்திரை ஒன்றை வெளியிட்டுவைக்குமாறு அக்கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-17)

## நாளை

பங்குனி 23
செவ்வாய்க்கிழமை
05.04.2005
திதி : ஏகாதசி
முற்பகல் 09.21 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
பிற்பகல் 02.34 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 10.38 - 12.08
ராகுகாலம் : 03.08 - 04.38
(யாவும் பழைய நேரப்படி)

# சைவநெறித் தேர்வின் பரிசளிப்பு நேற்றுச் சிறப்புற நடைபெற்றது

நல்லூர்.ஏப்.4

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் 2004 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை சைவநெறித் தேர்வுக்கான பரிசளிப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் வ.கந்தசாமி தலைமையில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா, ஆசிரியமணி பஞ்சாட்சரம், செல்வி சிவகஜனி ஸ்ரீகுமார், குமரேசன் பாலசண்முகன், சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி சரஸ்வதி ஜெயராசா வழங்கினார்.

முன்னதாக, மேற்படி சபையின் அறநெறிப் பாடசாலை, யாழ். இந்துக் கல்லூரி, வேலணை வைத்திலிங்கம் துரைசாமி ம.ம.வி. மாணவர்களின் திருமுறை புராணபடனம் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (எ-111)

## உதயவாக்கு

வாழ்க்கையில் எப்பொழுதுமே இரண்டு பக்கங்கள் காணப்படும். அதில் ஒன்று நன்மை மற்றொன்று தீமை. - ஷேக்ஸ்பியர்.

# ஓய்வுபெற்ற அதிபரின் சேவைநலன் பாராட்டு


வலி.தெற்கு.ஏப்.4

ஆனைக்கோட்டை, உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற செல்வி பிரியதர்சினி வடிவேலுவின் சேவை நலன் பாராட்டு விழா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் சிறப்புற நடைபெற்றது.

உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்தில் இருந்து அதிபர் செல்வி பிரியதர்சினி வடிவேலு ஆசிரியர், மாண[illegible]வர், பெற்றோர்கள் என்பவர் ச[illegible]ல் ஊர்வலமாக வித்தியாலய மண்டபத்துக்கு அழைத்து வரப்[illegible]ர். (எ-152)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
21 * 08 * 1934



மறைவு
06 * 03 * 2005

அமரர்

## வயிரவி செல்வராசா

கடலே கடலே கரைசேர்ந்த கடலே!
காலன் வடிவில் நீதான் காவிச் சென்றாயோ?
உன்னில் நாம் சவாரி செய்ததாலா,
உயிரினும் மேலான உத்தமர் மேல் பயணித்தாய்!

அகவைகள் எழுபது கடந்திடினும்
இருபதின் வேகமன்றோ இவர்தம் சேவைகள்!
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டிடினும்
ஈடாகுமா உமை இழந்த சோகம்?

நாளை (05-04-2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள்.

கொத்தியால் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(43780)(26-14-45)

# சுயதொழில் ஊக்குவிப்புக்கு கடன் வழங்க நடவடிக்கை

வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மக்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பை வழங்குவதற்குச் சமூக அபிவிருத்திச் சங்கம் ஒரு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கான நிதியை வழங்குவதற்குத் தேசிய நம்பிக்கை நிதியம் முன்வந்துள்ளது என்றும் -

தற்போது 32 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாகவும் - சமூக அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி ஜெ.நவநீதம் தெரிவித்தார்.

எமது மன்றத்தில் சேமிப்புக் கணக்கு வைததிருப்பவர்கள், சுயதொழில் திட்டங்களை மேற்கொண்டு வருபவர்கள், எமது அங்கத்தவர்களாக இருந்து விவசாயம் போன்ற தொழிலைச் செயது வருபவர்கள் ஆகியோருக்கு இந்த நிதிமூலம் உதவிகள் வழங்கவுள்ளோம். இந்த சுயதொழில ஊக்குவிப்புக் கடன் வழங்கலுக்கு 'சுனாமி உதவிக் கடன்' என்று பெயரிட்டுள்ளோம் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார்.(3-203-204)


## புதுவருடச் சிறப்புத் தள்ளுபடி விற்பனை!!!

செய்மதி தொலைக்காட்சித்துறையில் இலங்கையில் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களை வென்று எடுத்துள்ள Sats - Tech நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்குப் புத்தாண்டுச் சிறப்பு விலையில் செய்மதித் தொலைக்காட்சி உபகரணங்களை வழங்கி வருகின்றது.

'Ku' band DISH சிஸ்டம் Rs * 12,500 /= மட்டுமே
8' C' band DISH சிஸ்டம் Rs * 19,999 /= மட்டுமே
8' C' band &Ku band சிஸ்டம் Rs * 22,000 /= மட்டுமே

★ மற்றும் அனைத்துக் கேபிள் TV இற்குரிய உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

★ ஒரு வருட உத்தரவாதம்
★ விற்பனைக்குப் பிந்திய சேவை
★ Free Channel up dating
★ Free Software up dating
★ இலவசத் தொழில்நுட்ப ஆலோசனைகள்
★ தெளிவான காட்சி
★ துல்லியமான ஒலி

சித்திரை 14வரை அல்லது கையிருப்பு முடியும் வரை மட்டுமே!

SATS - TECH ENGINEER'S
(National Video Center)
182, K.K.S. Road, Kokuvil
(Near Kulapitty Church), Jaffna.
Phone: (021) 222 5908, 0777 710785.

(கி41069)(38-14-26-45)


# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
## சுப்பிரமணியம் சிவராஜா
(பிரபல வாகனத் தரகர்)

தோற்றம்: 22.08.1940
மறைவு: 19.02.2005

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாக இருந்தவரே!
பிற[illegible]க்குச் சேவை செய்வதில் மகிழ்ச்சி கொண்டவரே!
இன்முகங்காட்டி என்றும் இன்சொல் பேசி வாழ்ந்தவரே!
ஈகையே செய்து எப்போதும் இன்பங் கண்டவரே!
என்றும் உங்கள் கொள்கையை நம் வாழ்வில் கைக்கொண்டு
உங்கள் வழிநடத்தலிலேயே நாம் வாழ்வோம் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய செருக்கற்பதி விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் எமது இல்லம் நாடிவந்து எமது துன்பத்தைப் பகிர்ந்து ஆறுதல்கூறி அனுதாபம் தெரிவித்தோருக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் இரங்கல் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- அன்புடன் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

டச்சு வீதி, சாவகச்சேரி.

(C-41963) (53-14-46)

# யாழ்.மாவட்டப் பெருவிழாப் போட்டிகள் அடுத்த சனியன்று ஆரம்பமாகின்றன

வலி.தெற்கு,ஏப்.4

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான இவ்வருடத்துக்குரிய பெருவிளையாட்டுக்கள் எதிர்வரும் சனிக்கிழமை (09.04.2005) ஆரம்பமாகி மே மாதம் 25 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ள இப்பெருவிழாவுக்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர் வி.பாலசிங்கம் மேற்கொண்டுவருகிறார்.

பின்வரும் விளையாட்டுப் போட்டிகள் குறிப்பிட்ட திகதிகளில் குறிக்கப்பட்ட மைதானங்களில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உதைபந்தாட்டம் - ஏப்ரல் 9,10,11 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்.

துடுப்பாட்டம் - ஏப்ரல் 16,17 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம்.

கரபந்தாட்டம் - ஏப்ரல் 20,21,22 ஆம் திகதிகளில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்.

வலைபந்தாட்டம் - ஏப்ரல் 23,24,25 ஆம் திகதிகளில் உடுவில் மகளிர் கல்லூரி மைதானம்.

மெய்வன்மைப் போட்டி - மே மாதம் 19,20,21 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்.

பூப்பந்தாட்டம் - மே மாதம் 7,8 ஆம் திகதிகளில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மைதானம்.

மேசைப்பந்தாட்டம் - மே.மாதம் 10,11 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானம்.

உடற்பயிற்சி போட்டி - மே 25 ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்.

யாழ்ப்பாண மாவட்டப் பெருவிழா போட்டிகளில் முதல் இரு இடங்களை பெற்றுக்கொள்ளும அணிகள் வடக்கு - கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்ளும்.(3-152)

## யாழ்.பிரதேச செயலக மென்பந்து கிரிக்கெட்

யாழ்பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தப் போட்டியில் 24 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இதேவேளை - பெண்களுக்கான மென்பநது துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது. இதில் 6 கழகங்கள் பங்குபற்றுகின்றன.(3-190)

## முல்லைத்தீவு வலயச் சதுரங்கப் போட்டி:
# புதுக்குடியிருப்பு ம.வி. இரு பிரிவுகளிலும் சம்பியன்

புதுக்குடியிருப்பு,ஏப்.4

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி இரு பிரிவுகளிலும் சம்பியனானது.

கடந்த இரு தினங்களாக நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகள் வருமாறு:-

**19 வயது**

ஆண்கள் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வித்தியானந்தாக் கல்லூரி, கொக்கிளாய் அ.த.க.பாடசாலை.

பெண்கள் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், கொக்கிளாய் அ.த.க. பாடசாலை.

**வலைபந்தாட்டம்**

வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியும் 15,17,19 வயதுப் பிரிவினர்களுக்கு இடம்பெற்றது.

வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

சிறிசுப்பிரமணிய வித்தியாலயம், கலைமகள் வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, கலைமகள் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

செம்மலை மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி. (3-353)

## வலி.தெற்கில் கபடிப் போட்டி

வலி.தெற்குப் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்/பெண்களுக்கான கபடிப் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(3-190)

## பெண்களுக்கான கரபந்தாட்டம்

வலி.தெற்குப் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டி எதிர்வரும், சனிக்கிழமை காலை 9 மணியளவில் மானிப்பாய் வீதி, மருதனார் மடம், உடுவில் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 5 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. இதனைத் தொடர்நது ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது. இதில் 13 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

(3-190)

★ ★ ★

யாழ்.பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகின்றது.

இந்தப் போட்டியில் 5 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

(3-190)

விளையாட்டு

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் மழைத்தூறல்களின் மத்தியில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டிகள் இரண்டும் பார்வையாளர்களுக்குப் பெரும் விருந்தாக அமைந்தன.

யாழ்.லீக்கைச் சேர்ந்த றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் வலிகாமம் லீக்கைச்சேர்ந்த அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் முதலில் ஆட்டம் இடம்பெற்றது.

ஆட்டம் ஆரம்பமான இரண்டாவது நிமிடத்தில் றோயல் அணிக்கு கிடைத்த கோல் அடிக்கும் சந்தர்ப்பத்தினை முன்வரிசை வீரர் தவறவிட்டார்.

ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் அண்ணா விளையாட்டுக்கழக வீரர் செல்வகுமார் தனது அணிக்கான கோலினை அடித்தார்.

அண்ணா விளையாட்டுக்கழகம் ஒரு கோலினை போட்டதும் அணிவீரர்கள் மிக உற்சாகமாக எதிர் அணியினருக்கு கோல் அடிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பங்களை தடுத்து நிறுத்துவதில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இரண்டு அணியினருக்கும் மாறிமாறி மூலை உதை கிடைத்தும் அந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி கோல் பெறமுடியவில்லை.

றோயல் அணியினர் கோல் அடிக்கும் முயற்சியினை மேற்கொண்டு எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் நுழைந்த வேளை அண்ணா விளையாட்டுக்கழகத்தின் பின்கள வீரர்கள் அதனை முறியடிப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை, அண்ணா விளையாட்டுக் கழகத்தின் முன்களவீரர்கள், றோயல் விளையாட்டுக்கழகத்தின் கோல் பரப்பினுள் பந்துகளைக் கொண்டு தமது அணிக்கான கோலினை பெறுவதற்கு முயற்சித்தும் அது றோயல் விளையாட்டுக்கழக அணியினரின் பின்கள வீரர்களினால் அது முறியடிக்கப்பட்டது.

ஆட்டத்தின் 16ஆவது நிமிடத்தில் அண்ணா விளையாட்டுக்கழக வீரர் ஒருவர் விதிமுறைகளுக்கு மாறாக விளையாடியமைக்காக மத்தியஸ்தரினால் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கை செய்யப்பட்டார்.

உதயன் ஊடக அனுசரணை

முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் மிகவும் உற்சாகத்துடனும் கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருந்தனர்.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் றோயல் அணியினுடைய முன்வரிசை வீரன் சேகர் தட்டிக்கொடுத்த பந்தினை நேசன் மிகவும் நிதானத்துடன் அடித்து தமது அணிக்கான முதலாவது கோலினைப் பெற்றுக்கொடுத்தார்.

றோயல் அணியினர் தனது அணிக்கான இரண்டாவது கோலினை 17 ஆவது நிமிடத்தில் பெற்றது. இதனை சேகர் தட்டிக்கொடுக்க சதீஸ் கோல் ஆக்கினார்.

ஆட்டம் முடிவதற்கு 10 நிமிடங்கள் இருக்கையில் அண்ணா விளையாட்டுக் கழகத்தினருக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினைத் தவறவிட்டனர்.

ஆட்ட முடிவில் றோயல் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் யாழ்.லீக்கைச் சேர்ந்த சென்.றொக்ஸ் விளையாட்டுக் கழகமும் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

மிகவும் எதிர்பார்ப்புடன் ஆரம்பமான போட்டி, ஆரம்ப கட்டத்தில் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது.

ஆட்டம் ஆரம்பமாகி 3 ஆவது நிமிடத்தில் சென்.றொக்ஸ் அணி வீரர் எதிர் அணியின் கோல் பரப்பினுள் மிகவும் அண்மையில் வைத்து கோல் அடித்தார் அதுகோல் கம்பத்தின் மேலாக சென்றது.

இதேவேளை, 16 ஆவது நிமிடத்தில் சென்.றொக்ஸ் வீரர் விதிகளை மீறியமைக்காக மத்தியஸ்தரினால் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கை செய்யப்பட்டார்.

ஆட்டத்தின் முதல் பாதி இரண்டு அணியினரும் எதுவித கோலினை அடிக்காததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி முடியும்வரை இரு அணிகளுக்கும் சோதனையாக அமைந்தது. இரு அணிகளுமே கோல்களைப்பெறக் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டதுடன் எதிரணியினர் கோல்கள் பெறாமலும் தடுத்தாடினர்.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் கோல்களைப் பெற எடுத்த முயற்சிகள் எதிரணியினர்களால் தொடர்ந்து முறியடிக்கப்பட்டன.

கோல் கம்பங்களை நோக்கி அடிக்கப்பட்ட பந்துகூட வெளியால் சென்றதாலும் கோல் கீப்பர்களினால் தடுக்கப்பட்டமையாலும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறவில்லை.

ஆட்டம் முடிவடைவதற்கு முன்னர் இரண்டு அணியினரும் எதுவித கோல்களினையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை உதைப்பு (பெனால்ரி) வழங்கப்பட்டது. இதில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் 4 கோல்களையும், சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழகம் 3 கோல்களையும் பெற்றன.

இறுதியாக 4:3 என்ற கோல்கணக்கில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது. (3-190)

# கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய சுற்றுப் போட்டியில் சுண்டுக்குளி வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.4

சுண்டுக்குளி கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 40 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்திய ஓவர்கேம் முறையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சுண்டுக்குளி சனசமூக நிலைய அணி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் கிறீன் கிங்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இரவு 8 மணியளவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சுண்டுக்குளி சனசமூக நிலைய அணியை எதிர்த்து கொய்யாத்தோட்ட சனசமூக நிலைய அணி மோதியது.

ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் சுண்டுக்குளி சனசமூக நிலைய அணி இருநேர் செற்களில் 15:11, 15:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது.

இப் போட்டிக்கு நடுவராக கே.ஏகாம்பரம் கடமையாற்றினார்.

இறுதியாட்ட நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கப்டன் டி.ஏ.எம் குணசிங்கம் கலந்து கொண்டார். (3-190)

## மானிப்பாய் மகளிர் கோட்டச் சம்பியன்

மானிப்பாய் மகளிர் கல்லூரி வலய மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும் உடற்பயிற்சிப் போட்டியில் சம்பியனாகியது.

19 வயதுக்குட்பட்ட மகளிருக்கான போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி உடற்பயிற்சியில் வெற்றிபெற்றது இதுவே முதல் தடவையாகும்.

விரைவில் மாவட்ட மட்டப் போட்டியில் இவ் அணி இணைந்துகொள்ளும் என மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் தெரிவித்தார். (3-185)



கண்டாவளைக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயத்தின் முரசுமோட்டை விளையாட்டரங்கில் உடற்பயிற்சிப் போட்டிகள் நடைபெற்றன. மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: பரந்தன் செய்தியாளர்)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: மனோகரா, வளர்மதி அணிகள் இன்று களத்தில்

யாழ்ப்பாணம்,ஏப்.4

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் அனுசரணையுடன் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா வி.கவும் வளர்மதி வி.கவும் மோதுகின்றன.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார் வி.கவும் கிளிநொச்சி ஸ்கந்தா வி.கவும் மோதிவிருக்கின்றன. (3)


வனிலா சுவையூட்டப்பட்டது
Action
Nutritional Food Drink
போஷாக்கு நிறைந்த பானம்
பிள்ளைகள்
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, விட்டமின் B, மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
வாலிபர்
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
வயது வந்தவர்கள்
புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
கர்ப்பிணி/பாலூட்டும் தாய்மார்கள்
சக்தி, புரதம், கல்சியம், (ƒ)போலிக் அமிலம், விட்டமின் B12, இரும்புச்சத்து, மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
போஷாக்கின் வாழ்க்கை வட்டம்.
27 அத்தியாவசிய போஷனைப்பதார்த்தங்கள்
தகுந்த சின்க் இரும்புச்சத்து விகிதம்.
தகுந்த கல்சியம் பொஸ்பரசு விகிதம்.
வயோதிபர்
புரதம், விட்டமின் B, அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
450 கிராம்
ரூ.460/=
Net Weight : 450 g.
No added sugar
Vanilla Flavoured
Action
Nutritional Food Drink
Manufactured by :
Astron
Astron Limited,
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741, 5566741 Fax: 2636173
E-mail: astron@astron.lk

# பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு சகல தரப்புகளுக்குமான வழி யுத்தமா?



**நாட்டில் இன்று நிலவும் அரசியல் தேக்கநிலை குறித்தும், பிரச்சினைகளில் இருந்து வெளியேற அரசியல் கட்சிகள் தேர்ந்தெடுக்கத்தக்க நியாயமான வழி என்ன என்பது குறித்தும் அலசி ஆராயும் இக்கட்டுரையை பிரபல அரசியல் விமர்சகர் சுனந்த தேசப்பிரிய வரைந்துள்ளார்.**

**'ராவய' பத்திரிகையில் வெளியான அவரது கட்டுரையின் தமிழ் வடிவம் இது.**

இன்று ஐ.ம.சு.கூட்டணி அரசு பல பிரச்சினைகளில் சிக்கிச் சிறைப்பட்ட நிலையில் உள்ளது. இவற்றில் ஒன்று ஜே.வி.பியினருடனான கருத்து முரண்பாடாகும். நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதன் மூலம் அரசியல் அரங்கில் தொடர்ந்தும் நீடித்திருப்பதற்கான சந்திரிகாவின் எதிர்பார்ப்பு மற்றுமொரு பிரச்சினையாகும். அதேபோன்று, ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் அவசிய புனரமைப்பு நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டிய அவசர தேவை ஏற்பட்டுள்ளமையும் இப்பிரச்சினைகளில் ஒன்றாகும். ஆயினும், இவற்றில் எந்தவொன்றுதானும் இலேசில் தீர்வுகாண இயலாத சிக்கல் நிறைந்தவையாகும்.

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் எதுவும் இதுவரை அரசுக்குப் புலப்படவில்லை. இச்சகல பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணமான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கிலமையும் தீர்வுக்கான வழிகூடத் தென்படவில்லை. இந்த நிலையில் இக்கூட்டணி அரசு பதவி ஏற்று ஓராண்டு காலம் பூர்த்தியடைந்துள்ளது.

ஜே.வி.பியினரைப் பொறுத்தவரை ஜனாதிபதி அவர்களுக்கு ஒரு பம்பரம் போன்றவர்; காலாவதியாகிவிட்ட ஒரு பட்சணம் போன்றவர். ஆடையின்றி ஊர்வலம் சென்ற வரலாற்றுக் கால மன்னனைப் போன்றவர்.

அதேவேளை, ஜனாதிபதியின் கருத்தில் ஜே.வி.பியினர் பண்பற்றவர்கள், முன்னாள் கொலைகாரக் கும்பலின் அங்கத்தவர்கள், உக்கிரம் மிக்க அரசியல் அணுகுமுறையைக் கடைக்கொள்பவர்கள்.

இப்பரஸ்பர கருத்து வெளிப்பாடுகள் மூலம் இவ்விருதரப்பினர் மத்தியில் நிலவும் கருத்து மோதல்களின் தீவிரத்தை உணரமுடியும்.

இதனிடையே கிழக்கு மாகாணத்தின் பதற்றமான சூழ்நிலை நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்ற வண்ணமுள்ளது. கருணா தரப்பினருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பெதுவும் கிடையாதென அண்மைய தீவுச்சேனைச் சம்பவத்தின் பின்னர் எவராலும் வாதிடமுடியாதுள்ளது. விடுதலைப் புலிகளை வலிந்து யுத்தத்தில் ஈடுபடத் தூண்டும் நோக்கத்தில் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முகாம்களை அமைத்துத் தங்கியுள்ள கருணா தரப்பினர், அடிக்கடி விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் மீது துணிகரத் தாக்குதல்களைத் தொடுத்து வருவதாக எண்ணத் தோன்றுகின்றது.

## கிழக்கு நிலைமை

யுத்தமொன்று ஆரம்பிக்குமானால் கிழக்கு மாகாணத்தில் கருணா தரப்பினர் விடுதலைப் புலிகளுக்கு கடும் சேதத்தை விளைவிப்பர் என யுத்தத்தை விரும்பும் ஒரு தரப்பினர் நம்புகின்றனர். கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் ஸ்திரமற்ற நிலைமைக்குப் பதிலாக யுத்தத்தில ஈடுபடநேருமாயின், தம்மால் கிழக்கு மாகாணத்தின் நிலைமையைத் தமது முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவந்து தமது ஸ்திரநிலையை உருவாக்கிக் கொண்டுவிட முடியுமென விடுதலைப் புலிகள் நம்புவதாகத் தோன்றுகிறது. அத்தோடு, ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான புனர்நிர்மாணப் பணிகள் தொடர்பாக பொதுக் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்த முடியாது போகுமாயின் யுத்தநிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து பேணுவதில் பயனேதும் இல்லையெனவும் விடுதலைப் புலிகள் அமைப்பு நம்புவதாகத் தோன்றுகிறது. உண்மையில் அரசு மட்டுமன்றி விடுதலைப் புலிகள் அமைப்பும் கூட பிரச்சினைகளில் சிக்கிச் சிறைப்பட்டிருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

அரசு, ஜே.வி.பி. மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகிய முத்தரப்பினரும் இப்பிரச்சினைகளினின்றும் விடுபட்டு வெளியேற வேண்டியது அவசியமாகிறது. இல்லையேல், எவ்வித செயற்பாடுகளாலும் பயனேதும் கிட்டப்போவதில்லை. பிரச்சினைகளினின்றும் விடுபட்டு வெளியேறுவதற்கான வழி யுத்தமா இல்லையேல் சமாதான முயற்சிகளா என்பதே இன்றைய அதிமுக்கியமான கேள்வியாக அமைகின்றது.

இந்நாட்டின் பெரும்பாலான பொதுமக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. ஆனால், அவ்விருப்பத்தை யதார்த்தமாக்குவது சிரமமான செயற்பாடு என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் நாளுக்கு நாள் வலுவடைந்து செல்கிறது. சில சமயம் யுத்தமொன்றே இவற்றுக்கெல்லாம் இலேசானதொரு தீர்வாகும் என எண்ண வேண்டிய அளவுக்கு சமாதான முயற்சிகள் யாவும் சிக்கலடைந்துள்ளன.

ஜே.வி.பி மற்றும் ஸ்ரீ.ல.சு.கட்சி ஆகிய தரபபுக்கள் தம்மிடையே கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட வேளையில் அதிகாரப் பகிர்வு மற்றும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரம் ஆகிய இரு விடயங்களில் விடுதலைப் புலிகளுடன் அரசு தொடர்பு பேணக்கூடாதென்பது ஜே.வி.பி.யின நிபந்தனையாக அமைந்தது. தற்போதும் கூடடு ஒப்பந்தத்தின் அடிப்படை விதிகளில் இந் நிபந்தனை உள்ளடக்கப்பட்டேயுள்ளது.

ஆனால், ஜனாதிபதி தற்போது அதிகாரப் பரவலாக்கம் குறித்தல்லாது சமஷ்டி நடைமுறை வரை கருத்து வெளியிட ஆரம்பித்துள்ளார். இது கூட்டணியின் ஒப்பந்த விதிகளின் அடிப்படைக் கட்டுப்பாடுகளை மீறுமொரு செயற்பாடாகும். முதலில் ஒரே அரசின் கீழ் அதிகாரப் பகிர்வு என்ற வகையில் வகுக்கப்பட்ட விதிமுறைகள் தற்போது சமஷ்டி நடைமுறை குறித்து கருத்து வெளியிடுமளவுக்கு இறங்கி வந்துள்ளதாகத் தோன்றுகிறது. இது உண்மையில் இதயசுத்தியான - நேர்மையான - கருத்து வெளிப்பாடுதானா அல்லது வேறு ஏதாவது திட்டத்துடன் திசை திருப்பும் நோக்கம் கொண்டதொன்றா எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

1995ஆம் ஆண்டுக் கால கட்டத்தில் சமாதானம் மற்றும் அதிகாரப்பகிர்வு என்பன பற்றிப் பேசியோர் 'சமாதானத்துக்கான யுத்தம்' என நியாயப்படுத்தியதை இலேசில் மறந்துவிடக் கூடாது.

அதேபோன்று, நாட்டின் இன்றைய முக்கிய பிரச்சினையான விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் அவசியம் குறித்த நிலைப்பாட்டை ஜனாதிபதியால் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியவில்லை. ஜனாதிபதியின் நிலைப்பாட்டை ஒட்டியே ஜே.வி.பியும் தனது உறுதியான முடிவை மேற்கொள்ளுமெனத் தோன்றுகிறது. அதேவேளை, பொதுக்கூட்டமைப்பு உருவாக்குவது தொடர்பாக மிகவிரைவில் அரசின் முடிவு வெளியிடப்படுமென சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது. அதேசமயம், விடுதலைப் புலிகள் அமைப்போ இது தொடர்பாகத் தாம் தற்போது நோர்வே நடுநிலையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபுக்குத் தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ளதாகக் கருத்து வெளியிட்டுள்ளது.

பொது மேடைகளில் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை விமர்சிப்பதை ஜே.வி.பியினர் தற்போது நிறுத்தியுள்ளனர். அவ்விதம் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை விமர்சிப்பதன் மூலம் ஸ்ரீ.ல.சு.கட்சியின் செல்வாக்கைத் தம்மால் குறைத்துவிட முடியாதென்பதை ஆரம்பத்திலேயே அவர்கள் உணர்ந்து கொண்டிருந்தனர். ஆனால், ஜனாதிபதியால் தாம் விமர்சிக்கப்படுவது போன்று சமஷ்டி நடைமுறை குறித்த ஜனாதிபதியின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காவிடில் தமது அரசியல் செல்வாக்குக்குப் பின்னடைவு ஏற்படுவதை அவர்களால் தடுத்துவிட முடியாது.

## ஜே.வி.பியின் உத்தி

இந்தச் சிக்கலை எதிர்கொள்ளும் நோக்கத்தில் ஜே.வி.பி. தனது தரப்பின் வழமையான பாணியில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களின் அபிப்பிராயத்தைத் திரட்டும் வகையில் நாடு தழுவிய ரீதியில் இயங்கும் ஆயிரக்கணக்கான ஜே.வி.பி. ஆதரவுக குழுக்களின் கருத்துக்களைத் திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது. விடுதலைப் புலிகளுடன அரசு உத்தியோகபூர்வமாகத் தொடர்புகளைப் பேணுமாயின் அரசிலிருந்து தாம் விலகிவிடுவதை நியாயப்படுத்தும் நோக்கிலானவையே இச்சந்திப்புக்களாகும். ஆயினும், ஜே.வி.பி. அரசிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்ற கருத்துக்கு மிகக் குறைந்த - அதாவது ஐந்து சத விகிதமான உறுப்பினர்களின் ஆதரவே கிட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் அரசு பொதுக் கட்டமைப்பொன்றுக்கு இணங்குமானால் அரசினின்றும் ஜே.வி.பி. பெரும்பாலும் விலகிக் கொள்ளக்கூடும். அவ்விதம் தொடர்ந்தும் அரசில் இணைந்திருந்து செயற்படவும் இயலாது. அவ்வித சந்தர்ப்பமொன்றில் அரசிலிருந்து தாம் விலகிக் கொளவதை நியாயப்படுத்தவும், ஜனாதிபதிக்கெதிராகப் பிரசாரத்தை ஆரம்பிக்கவும் ஜே.வி.பி. தற்போது தயாராகிவருகிறது. இத்தகைய நோககமே நாடளாவிய ரீதியில் தமது ஆதரவாளர்களுடன் ஜே.வி.பி. மேற்கொண்டு வரும் கலந்துரையாடல்களாகும். விடுதலைப் புலிகள் அமைபபுடன் அரசு நெருங்கிச் செயற்பட முனையுமானால் அதனை எதிர்ப்பதற்காக ஜே.வி.பியின் ஓர் அங்கமான நாட்டுப்பற்றாளர் அமைப்பு வெளிப்படையாகவே பொதுமக்களது ஆதரவைத் திரட்டும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. அடிப்படை நோக்கமெதுவுமின்றி ஜே.வி.பி.அரசிலிருந்து வெளியேறிவிடப் போவதில்லை. பொதுத் தேர்தல் ஒன்றுக்கான நெருக்குதலை உருவாக்கி மற்றொரு புதிய கூட்டணியை உருவாக்கும் நோக்கிலேயே ஜே.வி.பி. அரசினின்றும் தகுந்த நேரத்தில் வெளியேறிவிடத் திட்டமிட்டு வருகின்றது. தனித்தனியாகப் பிரிந்து தேர்தலில் போட்டியிட்டால் ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய இரு கட்சிகளையும் பின்தளளி தேர்தலில் வெற்றிபெற ரணிலுக்கு அது வாய்ப்பாகி விடுமென்பதை ஜே.வி.பி. நன்கறியும்.

அவ்விதம் இவ்விரு தரப்பினரும் தனித்தனியாகப் போட்டியிட நேர்ந்தால் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஒழித்துவிட்டு, அரசியலில தாம் தொடர்ந்தும் செயற்படுவதற்கான சநதிரிக்காவின் கனவு பலிக்காது போய்விடும். அதுபோன்றே பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு யோசனையும் இவ்விரு தரப்பினர் மத்தியிலும் பிளவு ஏற்படுமானால் செயலுருப்பெறாது போய்விட வாய்ப்புண்டு. அவ்வித நிலை நாட்டின் அரசியல் அதிகார ருசி கண்ட எவரும் விரும்பாத பயங்கரக் கனவு போன்றதாக அமையக்கூடும். அரசினின்றும் ஜே.வி.பி. விலகிச் செல்ல அனுமதிக்கும் அரசின் செயற்பாடு தமக்குத் தாமே குழி பறித்துக்கொள்ளும் செயற்பாட்டை ஒத்ததாக அமையும். ஜே.வி.பி. அரசினின்றும் பிரிந்துசென்று மீண்டுமொரு சந்தர்ப்பத்தில் கூட்டணியொன்றை உருவாக்க விருப்பம் தெரிவிக்குமானால் அது தனது சொந்தப் பலத்தை அதிகரிக்கச்செய்யும் வரையிலான பேரம் பேசலாகவே அமையும். அவ்வித நிலை விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான, யுத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முனைப்புடன் கூடிய பலமான நிலையிலிருந்து கொண்டு ஜே.வி.பி. மேற்கொள்ளும் பேரம் பேசலுடன் உருவாகும் புதிய கூட்டணியாக உருவாக நேரும்.

பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டுத் தோல்வியுற விரும்பாத ஸ்ரீல.சு.கட்சித் தலைவர்கள், தேர்தலொன்றைச் சந்திக்க வேண்டி ஏற்படும் சூழ்நிலையில் எவ்விதத்திலாவது ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிடுவதே அவசியமானது எனக் கருதுவதற்கும் வாய்ப்புண்டு.

மிக விரைவாக அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டால் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் அவர் செல்லாக்காசு போன்றே ஏனையோரால் கருதப்படுவார். தற்போது கருத்து வேற்றுமைகள் காரணமாக இக்கூட்டணி அரசு உடைபட நேர்ந்தாலும் கூட, பின்னர் பொதுத் தேர்தல் ஒன்றை சந்திக்க வேண்டி ஏற்படும் வேளையில் இவ்விரு தரப்பினரும் மீண்டும் தேர்தல் கூட்டு ஒன்றை ஏற்படுத்தித் தேர்தலில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்படுவதற்கு இவ்விதம் ஸ்ரீல.சு.கட்சிக்கு ஆதரவு அலையில் ஏற்படும் பின்னடைவே பின்னணியாக அமையும்.

## நல்லிணக்க அரசு

இந்த வகையில் இக்கூட்டணியில் பிளவு ஏற்படுவது ஜனாதிபதியின் தற்போதைய பிரபல்யத்துக்குப் பின்னடைவாகவே அமையும். அவ்விதம் இக் கூட்டணி பிளவுறுமானால் ஸ்ரீ.ல.சு. கட்சி, ஐ.தே.கட்சியுடன் கூட்டு ஒப்பந்தமொன்றை உருவாக்கிக்கொண்டு நல்லிணக்க அரசொன்றை நிறுவமுயல்வதே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு மாற்று வழியாக அமையும். அத்தகையதொரு நிலையில் எதிர்காலத்தில் நாட்டின் ஜனாதிபதியாகும் கனவுடன் செயற்பட்டு வரும் ரணில் கூட அத்தகைய யோசனைக்கு இணங்கக் கூடுமென எதிர்பார்ப்பது சிரமமாகும். ரணிலின் அரசியல் வாழ்க்கையில் இன்றைய அவரது எதிர்பார்ப்பு நிறைவேற்று அதிகாரங்களுடன் கூடிய எதிர்கால ஜனாதிபதிப் பதவியே ஆகும். அதற்கான வாய்ப்பு நெருங்கி வருவதாக அவர் தற்போது நம்புகிறார்.

2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் 2004ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் வரையான காலத்தில் தேசிய நல்லிணக்க அரசின் நிர்வாகத்தில் ஏதோ ஒரு வகையில் யதார்த்த ரீதியில் நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. அந்த வேளையில் எழுபது சதவீத மக்கள் அந்த அரசுக்கு ஆதரவளித்தனர். விசேடமாக சர்வதேச சமூகம், இந்நாட்டின் வர்த்தக சமூகம் மற்றும் சமாதானத்தை விரும்பும் அமைப்புக்கள் அரசுக்கு ஆதரவளித்தன. எனவே, எவ்வளவு தான் சிரமமாக இருப்பினும், கருத்து முரண்பாடுகளைக் காரணம் காட்டி இக் கூட்டணி அரசிலிருந்து வெளியேறுவது ஜே.வி.பிக்கு ஆரோக்கியமானதொன்றல்ல.

சிலவேளை, ஜனாதிபதி ஜே.வி.பியினருடனான தமது கருத்து வேறுபாடுகளால் அரசுக்கு ஏற்படவுள்ள பின்னடைவை வேறேதாவது மாற்று வழிகள் மூலம் சீர்செய்து கொள்ளத் திட்டமிட்டிருக்கக் கூடும். ஐ.தே.கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் குறிப்பிடட எண்ணிக்கையானோரை அரசின் பக்கம் கட்சித்தாவல் செய்விப்பதற்கு ஜனாதிபதி முயற்சி செய்துவருவது இரகசியமான ஒன்றல்ல.

எனவே, தமது ஜனாதிபதிப் பதவியில் தொடர்ந்தும் நீடித்திருப்பதற்கான சந்திரிகாவின் விருப்பம் மற்றும் அரச அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கான ஸ்ரீல.சு.கட்சியின் எதிர்பார்ப்பு என்பவற்றில் வெற்றியடைய வேண்டுமானால் ஒன்றில் தற்போதைய கூட்டணி அரசு பிளவுபடாது இருத்தல் வேண்டும். அல்லது நல்லிணக்க அரசு ஒன்றின் நிர்வாகம் நாட்டுக்கு அவசியமாகும். இதைவிடுத்து ஒரேயடியாக இந்தக் கூட்டணி அரசு பிளவுபடுமானால் சகலரினதும் எதிர்பார்ப்புக்களும் நிறைவேற வாய்ப்புக் கிட்டப் போவதில்லை.

அதேவேளை, சமாதானத்தை இந்நாட்டில் நிலைநிறுத்தத்தக்க விசுவாசமான அர்ப்பணிபபு உணர்வுடனான நோக்குடன் கூட்டணி அரசு நாட்டை நிர்வகிக்க இயலும். இந்தவேளையில் யுத்தநிறுத்தமொன்றின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பை நலிவடையச் செய்ய முடியுமெனவோ, அவ்விதம் நலிவுறும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுக்களை மேற்கொள்வது இலகுவானதாக அமையும் எனவே, ஜே.வி.பியினர் மட்டும் தான் கருதுகின்றனர் என்றில்லை. 1995 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை ஆட்சியில் இருந்த பொ.ஐ.முன்னணி அரசும் கூட மேற்கூறிய விதத்திலேயே கருதி வந்துள்ளது. தற்போது முல்லைத்தீவில் ஆழிப்பேரலை அனர்த்தங்களும், கருணாதரப்பினரின் செயற்பாடுகளும் இந்த எதிர்பார்ப்புக்களுக்கு மேலும் வலுவூட்டின.

யுத்தமொன்று மீண்டும் உருவாகுமானால், தற்போதைய கூட்டணி ஒருபோதும் பிளவுபடப் போவதில்லை. மாறாக மேலும் இறுக்கமடையும். இக்கூட்டணி பிளவுபடாது தொடர்ந்து நீடிக்க வேண்டுமானால், அதற்கான ஒரே மார்க்கம் யுத்தம், எவ்வகையிலாவது மீண்டும் ஆரம்பிக்கப் படுதலே எனவும் கொள்ள இயலும். ஏனெனில், இனப்பிரச்சினை விடயத்தில் யுத்தமோ அல்லது சமாதான முயற்சிகளோ அற்ற தேக்கநிலை தொடர்ந்திருக்க இயலாதென்பது யதார்த்த உண்மையாகும்.

இதற்கான காரணம் இச்சிக்கல்களில் சம்பந்தப்படும் ஒரு தரப்பாக நாம் விடுதலைப் புலிகள் அமைப்பையும் கொள்ள வேண்டியிருப்பதாகும். ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் தொடர்பாக பொதுக்கட்டமைப்பொன்று உருவாக்க இயலாதுபோகும் பட்சத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு போர்நிறுத்த உடன்பாட்டினின்றும் விலகிக்கொள்ளும் நிலை உருவாகக்கூடும். அவ்வாறானதொரு நிலை உருவாவதற்கு லக்ஸ்மன் கதிர்காமர் போன்ற கடுங்கோட்பாட்டாளர்களுடைய கருத்து வெளிப்பாடுகளும் பின்புறத் தூண்டுதல்களாக அமைகின்றன. சிலவேளை, தற்போதைய சூழ்நிலையில் நியாயமானதாகத் தோன்றும் இவ்வித கருத்து வெளிப்பாடுகள் குறுகிய கால யுத்தமொன்றை விடுதலைப் புலிகளும் விரும்பும் ஒரு சூழ்நிலையை உருவாக்கக்கூடும்.

கருணா தரப்பினருடனான பலப்பரீட்சையில் சாதகமான முடிவொன்றை யுத்தமொன்றின் மூலமே பெற்றுக்கொள்வது சாத்தியமென விடுதலைப் புலிகள் கருதுவதாகத் தோன்றுகின்றது. அவ்வாறான குறுகிய கால யுத்தமொன்றின் பின்னர் தமது தரப்பால் சிறப்பான போர்நிறுத்த உடன்பாடொன்றை ஏற்படுத்த முடியுமென ஜே.வி.பியினர் கருதுவது போன்றே, விடுதலைப் புலிகளும் கருத இடமுண்டு.

**தமிழில்: வீயெஸ்ரீ**

2001 ஆம் ஆண்டில் பொ.ஐ.முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குமிடையே மேற்கொள்ளப்படவிருந்த யுத்தநிறுத்த உடன்பாடு, அக்கட்சியினுள் இருந்த கடும் கோட்பாட்டாளர்களது எதிர்ப்புக்களால் தடைப்பட நேர்ந்தது. இன்று ஸ்ரீல.சு. கட்சிக்குள் இருக்கும் ஜே.வி.பியினரின் நெருங்கிய சகா லக்ஸ்மன் கதிர்காமரே இதற்குக் காரணம் என்பதனை நாம் மனதில் இருத்தியாக வேண்டும். கதிர்காமர் நல்லிணக்க அரசொன்றை உருவாக்கும் முயற்சியைக் கூட எதிர்ப்பவர். அது மட்டுமன்றி இலங்கையின் பிரச்சினையில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென அவர் வற்புறுத்திக் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து, இந்த வேளையில் மீண்டும் யுத்தமொன்றில் ஈடுபடுவது இச்சகல தரப்பினருக்கும் இலேசானதொரு வழியாகத் தெரியக்கூடும். ஆயின் இச்சகலரது தெரிவுகளும் சிரமங்களை ஏற்படுத்த வல்லன. தற்போது நாட்டுக்குத் தேவைப்படுவது நியாயமான காரணமேயாகும். பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நியாயமான காரணத்தை எவரால், எப்போது வழங்க முடியுமென்பதே தற்போது எம்முன் எழுந்துள்ள வினாவாகும்.

✲



Rockland
Rockland
புதிய வருடம்
பழைய வழக்கம்
ROCKLAND
OLD
ARRACK
ROCKLAND
OLD
ARRACK
ROCKLAND DISTILLERIES LTD
SRI LANKA
ROCKLAND
EXTRA STRONG
OLD
ARRACK
ROCKLAND DISTILLERIES LTD
SRI LANKA
றொக்லண்ட் அதிசக்தி பழைய தென்னஞ் சாராயம்
மற்றும் றொக்லண்ட் பழைய தென்னஞ் சாராயம்
அனைத்தும் புதிதாகும் புத்தாண்டில் என்றும் மாறாத
அதி சுவையின் புதுப்பொலிவில்
பழைமைச் சுவை பழகிய சுவை
றொக்லண்ட் பழைய சாராயம்
ஒரே கூரையின் கீழ் தயாராகும் விஷேடமிக்கத் தயாரிப்பு
வினோதமாக இணைந்திருங்கள்
மேலதிக ஸ்ட்ரோங் மி.லீ.750 – ரூபா.385/-
மி.லீ.375 – ரூபா.200/-
மி.லீ.180 – ரூபா.115/-
பழைய சாராயம் மி.லீ.750 – ரூபா.365/-
மி.லீ.375 – ரூபா.190/-
மி.லீ.180 – ரூபா.110/-
ESTD. 1924
ROCKLAND
எமது பதமறிந்த நாமம்

# இசைத்துறை வளர்ச்சிக்காக சிறப்புடன் பணியாற்றும் இளங்கலைஞர் மன்றம்



## 35ஆவது ஆண்டு விழாவில் பாராட்டு

சில தடங்கல்கள் இடைக் காலத்தில் ஏற்பட்ட போதும் கூட இசைத்துறையின் வளர்ச்சிக்காகத் தனது பணியைச் சிறப்பான முறையில் ஆற்றி கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்தி வருகின்றது நல்லூர் இளங்கலைஞர் மன்றம் என யாழ. மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் 35 ஆவது இசைவிழாவின் நான்காம் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அன்றையதினம் மன்றத்தின 35ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கவிஞர் சோ.பத்மநாதனின் முத்துச் சிரிப்புப் பாடல்கள் இறுவட்டு என்பனவும் வெளியிடப்பட்டன.

யாழ். மாநகர சபை ஆணையாளர் தமது தலைமையுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பலர் எமது நாட்டைவிட்டு வெளிநாடுகள் பலவற்றில் வாழ்ந்தாலும், அடையாளத்தைப் பேணும் பொருட்டுப் பிறந்த இடத்தை வளப்படுத்த வேணடும் என்பதில் நிறையவே அக்கறைகொண்டுள்ளனர்.

கலைஞர்களை ஒன்றுகூட்டி இந்த மன்றத்தை அமைதத பொன.சுந்தரலிங்கம் கனடாவில் வாழ்ந தாலும் கூடத் தன்னுடைய சிந்தனைகளினூடு இந்த மண்ணின் கலைவளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றார். யாழ்ப்பாணத்தில் எங்களுடன் இருந்து பணியாற்றியவர் கனடாவில் இருந்தும் எங்களுக்காகப் பணியாற்றுகிறார்.

நெருக்கடிகளை மறந்து வாழ இது போன்ற விழாக்கள் அவசியம். யாழ். மாநகர சபையினால் உருவாக்கப்படும் அரங்கு நவீன வசதிகளோடு உலகத்தி லுள்ள கலையரங் குகளுக்கு நிகராக அமைக்கபபடவுள்ளது. எனினும் இளங்கலைஞர் மன்றத்தின் பணி கடந்த 35 ஆண்டு காலப்பகுதியில் எவ்வாறு உன்னத நிலையில் இருந்ததோ அதேபோன்று தொடர்ந்தும் திகழவேண்டும் - என்றார்.

விரிவுரையாளர் எஸ்.செல்லக்குமார் பேசும்போது கூறியதாவது:-

கருத்தியல் ரீதியாக நவீன சமகாலச் சித்திரிப்பு, சமுதாயச் சித்திரிப்பு பக்குவழியூடாக நல்ல கருத்துக்களைச் சொல்லும் மரபு எமது கலைகளில் உண்டு. கந்தபுராணம் நல்லூர் விழாக் காட்சிகள் எமது கண்ணுக்குமுன் விரிகின்றவகையில் கவிஞரது கவிச் சிறப்பும், பாடகரது வளமும் முத்துச்சிரிப்பினூடாகத் தெரிகின்றது. இருளில் இருக்கும் மக்களை ஒளிக்கு இட்டுச் செல்லும் இத்தகைய பாடல்கள் எமது மண்ணிற்குத் தேவையான ஒன்று.

இசை அறிவை எமக்குத் தரக்கூடியதாக இசைவாணியும், முத்துச்சிரிப்பு இறுவட்டும் அமைந துள்ளன - என்றார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கூறியதாவது:-

எமது இனத்திற்குப் புத்துயிரூட்டக் கூடியதாக எமது கலைகள் வளரவேண்டும் என்பதில் நல்லூர் இளங்கலைஞர் மற்றம் இன்னல்களின் மத்தியிலும் தனது பங்களிப்பை வழங்கிவருகின்றது. இளங்கலைஞர்களை ஒன்றுகூட்டி, இந்த நிறுவனத்தின் ஊடாக இசைக்கலைக்கும், விடுதலைக்கான உணர்வுகளை ஊட்டும் பாடல்களையும் இந்த மண்ணுக்கு வழங்கியவர் இதன் ஸ்தாபகர் பொ.சுந்தரலிங்கம். அந்த மாபெரும் கலைஞனின் பாடல்களை அவர் இல்லாத போதும் நலலைக் கந்தன் ஆலயத்தில் நாம் தினமும் கேட்டு மகிழ்கின்றோம்.

அவர் இடம்பெயர்ந்தபோது இந்த மண்டபத்தின் நிலைபற்றிப் பலரும் சிந்தித்தார்கள். நாம் திரும்பி இங்குவந்தபோது இந்த மண்டபம் நல்லநிலையில் இருந்தது.

கவிஞர் சோ.பத்மநாதனின் முத்துச்சிரிப்பு என்ற இந்த இறுவட்டில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் எங்களை மெய்சிலிர்க்கச் செய்கின்றன. நல்லூர் கந்தன், துர்க்கை அம்மன், நயினை நாகபூஷனி அம்பாள் அவர்கள்மீது பாடப்பட்ட பாடல்கள் தனது வளமான குரலின் ஊடாக எமக்குத் தந்தவர் பொன்.சுந்தரலிங்கம்.

அழுதுகொண்டிருக்கும் ஈழத்தமிழர்களாகிய நாங்கள் சிரித்துவாழ ஒரு நல்ல சகுணமாக இந்தப் பாடல்கள் அமைந்துள்ளன. சந்தத்தில் அருணகிரிநாதர் பாடியது போன்று எமக்கு விடிவுதரக் கேட்கும் இப்பாடல்கள் மிகவும் அற்புதமானவை - என்றார்.

கவிஞர் சோ.பத்மநாதன், பிரபல இசையமைப்பாளர் கண்ணன் ஆகியோரின் உரைகளும இடம்பெற்றன. யாழ். பல்கலைக்கழக கலைத்துறைப் பீடாதிபதி எஸ்.சிவச்சந்திரன் இசைவாணி, முத்துச் சிரிப்பு இறுவட்டு ஆகியவற்றை வெளியிட்டுவைத்தார். (ப-111-204)

# பொறுமையைக் காக்கமுடியாதநிலை தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுவருகிறது



வடமராட்சி,ஏப்.4

தமிழ் மக்கள் பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறார்கள். இனியும் பொறுமையைக்காக்க முடியாத நிலை ஏற்பட்டுவருகின்றது. பொறுமைக்கும் எல்லையுண்டு. அது மீறப்பட்டால் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவார்கள்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் வடமராட்சியில் நடைபெற்ற பேரணி முடிவில் தம்பசிட்டியில் இடம்பெற்ற கண்டனக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த ம.செபஸ்ரியன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின்போது ஈழவேந்தன் எம்.பி. மேலும் பேசுகையில் கூறியதாவது-

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் உயிர் குடிக்கப்படுகிறது. குடாநாட்டிலிருந்து 7 லட்சம் தமிழ் மக்கள் வெளியேறிவிட்டார்கள். 5 லட்சம் தமிழ் மக்களே இப்போது உள்ளார்கள். 50 ஆயிரம் இராணுவததினரும் இங்கு நிலைகொண்டுள்ளார்கள். அதாவது, பத்து தமிழ் மகனுக்கு ஒரு இராணுவம் என்ற வீதப்படி இராணுவத்தினர் இருந்து வருகிறார்கள்.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான மண்ணும கடலும் பாதுகாக்கப்படவேண்டும். இப்போது தங்கள் கடலில் கடற்றொழிலும் எங்கள் மண்ணில் விவசாயமும் செய்யமுடியாதநிலை இருந்து வருகிறது. உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையினால் தெல்லிப்பழை, குரும்பசிட்டி மக்கள் தங்கள் ஊர்களுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றார்.

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கச் சம்மேளனத்தின் செயலாளர் க.சூரியகுமாரன் பேசுகையில் -

கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் செல்லும் திட்டத்தை நாம் ஏற்கமாட்டோம். எமது நிலத்தில் ஓர் அங்குல நிலத்தைக கூட விட்டுக்கொடுக்க நாம் தயாராக இல்லை. எமது மண்ணையும் விட்டுப் போக நாம் தயாராக இல்லை. இதற்காக நாம் போராடவும் தயாராக இருக்கின்றோம். ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்து நாங்கள் அகதிமுகாம்களில் இருந்தவேளை கடற்கரையோரமாக 100 மீற்றருக்குள் கரையோர மக்களின் உடைமைகளைக் கொண்டு இராணுவத்தினர் காவலரண்களை அமைத்துள்ளனர். 100 மீற்றர் தூரம் என்ற போர்வையில் எமது பிரதேசங்களை உயர் பாதுகாப்பு வலயமாக்கத திட்டமிடப்படுகிறது.

கொழும்பில் ஜனாதிபதி மாளிகை, பிரதமர் அலுவகம், குடிவரவு, குடியகல்வு அலுவலகம், தமிழ்மக்களை நசுக்கப் பேரினவாதிகளால் திட்டமிடப்படும் கலதாரி ஹோட்டல், உல்லாசப் பயணத்துறை மூலம் திறைசேரியை நிறைக்க உதவும் காலிமுகத்திடல் என்பனவெல்லாம் கடற்கரையிலிருந்து 100 மீற்றருக்குள்ளேதான் இருக்கின்றன. அப்படியானால் இவற்றையும் மூடவேண்டுமல்லவா. எமக்கு அரசு உதவினால் என்ன உதவாவிட்டால் என்ன எமது பிரதேசங்களில் எமது தொழிலுக்குரிய வாடிகளை அமைத்து நாம் செயற்படுவோம்.

நாம் கடலோடு பிறந்தோம்; வளர்ந்தோம்; விளையாடினோம்; தொழில்களைப் புரிந்தோம்; வாழ்ந்தோம்; இப்போது அழிந்துவிட்டோம்; மீண்டும் எழுந்து வாழ்வோம்; - என்றார். (ப-173)




# தொல்லியற் பொருள்களைக் காப்பதன்மூலம் எமது பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களைப் பேணலாம்



யாழ்ப்பாணம்,ஏப்.4

வளர்ச்சி பெற்ற நாடுகள எல்லாம் தமது பாரம்பரியப் பொருள்களையெல்லாம் பேணிப்பாதுகாத்துவர, நாம் எமது பாரம்பரியங்கள் அனைத்தையும் இழந்து வருகிறோம். இது கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறு யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்தார்.

இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் அமைக்கப்பட்ட அறிவாலயமும் அரும்பொருள் காட்சியமும் திறந்துவைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசியக கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் தனது வாழ்த்துரையில் தெரிவித்ததாவது:-

எமது மண்ணில் தமிழ் மன்னர்களுடைய இராட்சியம் இருந்ததற்கு நல்லூரில் உள்ள இடிந்தகட்டடம் ஒன்றும் சங்கிலியன் சிலை ஒன்றும்தான பேணப்பட்டுள்ளது. வேறெதுவும நம்மிடம் இல்லை. சங்கிலியன் ஆண்ட இடமெல்லாம் மாற்றம் பெற்றுவிட்டன. வளர்ச்சி பெற்ற நாடுகள் எல்லாம் தமது பாரம்பரியப் பொருளகளைப் பேணிக்காத்துவர நாம் எமது பாரம்பரியங்கள் அனைத்தையும் இழந்துவருகிறோம். இந்த அறிவாலயம் பொருள்களை மட்டும் பாதுகாப்பதோடு நில்லாமல் எமது வாழ்க்கை முறைகளைக் காட்டக்கூடிய விடயங்களை உள்ளடக்கி இருக்கவேண்டும். யாழ்ப்பாணத்தைப் பார்வையிட வருபவர்களுக்கு, கோட்டை, கீரிமலை, பல்கலைக கழகம் போன்றதொரு குறியாக இக்காட்சியகம் விளங்கவேண்டும். யாழ்ப்பாணப் பாரம்பரியத்தைப் பார்வையிடக்கூடிய ஒரு மையமாக இது விளங்க வேண்டும். அதற்கேற்றவாறு திட்டங்கள தீட்டப் படவேண்டும் - என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் கே.தேவராஜா தொடக்கவுரையில் கூறியதாவது:-

எல்லாவளமும் உடைய இணுவில், அரும்பொருள்காட்சியகத்தையும் இன்று அமைத்து தனிப்பெருமை அடைகிறது. இவ்வறிவாலயமும் காட்சியகமும் எமது பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் பொருளாதார வர்ச்சிக்கும் உதவக்கூடியவை. ஆலயங்கள், பொதுநூல் நிலையம போன்றவை சூழ்ந்திருக்க காட்சியகம் அமைந்திருப்பதால் அரசு, இணுவில் கிராமத்தை புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவேண்டும்-எனக் கூறினார்.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்), இளைப்பாறிய அதிபர் செ.சோதிப்பெருமாள் உட்படப் பல பிரமுகர்களும் உரையாற்றினர். (ப-152-204)

# எமது பிரதேச சுகாதாரம் மேம்பட வேண்டுமெனில் நோய் பற்றிய விழிப்புணர்வு தேவை

நீண்டகாலப் போரினால் பாதிப்படைந்துள்ள எமது பிரதேசத்தின் சுகாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும. நோயைக் குணப்படுத்து வதில் காட்டும் தீவிரம் போன்று நோய் வராது எப்படித் தடுக்கலாம் என்பதில நாம் கூடிய கவனஞ் செலுத்த வேண்டும் என தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி விக்னேஸரன் தெரிவித்தார்.

யாழ்.பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் நிறுவனத்தலைவர்களுக்கும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களுக்குமான பொதுச் சுகாதாரம் தொடாபான கலந்துரையாடல் அண்மையில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரை நிகழ்த்திய தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி விக்னேஸ்வரன் கூறியதாவது:-

எம்மிடம் உள்ள வளத்தினை முறையாக முழுமையாகப் பயன்படுத்தவேண்டும். மக்கள் நலனுக்கே முக்கியம் கொடுக்கவேண்டும். எமது பலமும் பலவீனமும் எம்மிடமே உள்ளன. எமது பிரதேசம் நீண்டகாலப் போரினால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எமது சுகாதாரம் சீர்கேடடைந்துள்ளது. சுகாதார சேவைகளை முன்னெடுப்பதில் ஒத்துழைப்புக் குறைவாகக் காணப்பட்டதனாலேயே, எமது தமிழர் பிரதேசத்தில் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழ சுகாதார சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுகாதார வளர்ச்சிமூலம் நோயைக் குணப்படுத்துவதை விட நோய் ஏற்படாமல் எப்படித் தடுக்கலாம் என்பதில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியம். தற்போது யாழ்ப்பாணத திற்கென நிலையான ஒரு பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருப்பது சுகாதார சேவைகள் வளர்ச்சிக்குச் சாதகமாக அமையும் - என்றார். (ப-51)

# சைவ சமயத்தின் வளர்ச்சிக்காக செயற்கரிய செய்தவர் ஆறுமுகநாவலர்

## குருபூசை தின விழாவில் சைவப்புலவர் கந்தசாமி



யாழ்ப்பாணம்,ஏப்.4

சைவத்தை வளர்க்கவும் தமிழ்மொழியை மேம்படுத்தவும் செயற்கரிய செயல் புரிந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். சைவபரிபாலனசபையின் தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி. சைவபரிபாலனசபை ஏற்பாடு செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலின் 125 ஆவது குருபூசை நிகழ்வுகள் அண்மையில் நீராவியடி நாவலர் ஆச்சிரமத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளுகக்குத் தலைமை வகித்து உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சைவப்புலவர் வ.கந்தசாமி தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல். சைவத்தையும், தமிழையும் தமது இரு கண்களாகப் போற்றி வாழ்ந்தவர். அவர் செய்த சிவபுண்ணியம் ஒப்புயர்வற்றது. தனது வாழ்நாளில் பிரமச்சரிய விரதம் அனுட்டித்து தனித்து நின்று பணியாறறியவர் அவர். அவரது உள்ளம் சைவம் - தமிழ் என்றே துடித்தது.

சமய அறிவுக்கு தமிழ் அறிவும் முக்கியம் எனக் கண்டவர் ஆறுமுகநாவலர். இதனால் சைவ சமய அறிவின் வளர்ச்சிக்காக முதலாம், இரண்டாம் சைவ வினா விடைகளை அவர் தந்தார். அதே போன்று தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இலக்கண வினா விடை, இலக்கணச்சுருக்கம், நன்நூற்காண்டிகையுரை என்பனவற்றைத் தந்தார். இன்று இந்நூல்களைக் கற்போர், கற்பிப்போர் தொகை குறைந்துவிட்டது.

நான்காம் பால பாடம் ஒன்றே மொழியறிவுக்கு மிக உகந்தது. சிவநெறி தழைக்கவும், தமிழினைப் புதுக்கவும் வந்தவர் ஆறுமுகநாவலர். 'செயற்கரிய செய்த பெரியவர்' ஆறுமுகநாவலர். அத்தகைய நாவலர் பொருமானுக்கு நன்றிக்கடனாக சைவத்தமிழ் உலகம் என்ன செய்ய வேண்டும். எதிர்காலத்தின் பயன் கருதி நூல்களை மட்டும் தரவில்லை. உறுதுணையாக வேண்டிய தருமச் சொத்துக்களையும் தேடிவைத்துச் சென றார்.

அவருடைய நோக்கங்களை நிறைவேற்றவே சைவபரிபாலன சபை, நாவலர் தர்மகர்த்தா சபை என்பன தோன்றின. நாவலரது நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சிகள் அவசியம். அவரது நூல்களை ஒன்றுசேர்த்து மக்கள் பலரும் படிக்க வழி வகுக்கும் ஆறுமுகநாவலர் நூல் நிலையம் மிகவும் அவசியமானதொன்று. அவருடைய வாழ்க்கை வரலாறு சரியான காலக்கணிப்போடு நூலாக வெளிவர வேண்டும். இவ்வருடம் நாவலர் தர்மகர்த்தா சபை நாவலர் நான்காம் பாலபாடத்தை வெளியிட்டமை அரிய முயற்சியாகும். சைவ சமயத்தின் ஒழுங்கின் காவலனாக நாவலர் வாழ்ந்தார்.

ஈழநாட்டில் மட்டுமன்றி இந்தியாவிலும் நாவலர் தமிழ்ப் பணிகளைச் செய்துள்ளார் என்பதை அவரது வரலாறு காட்டும்.

யாழ்ப்பாணத்தில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் (நாவலர் மகாவித்தியாலயம்) சைவசமய வகுப்பு உயர்தர தமிழ் வகுப்பு, சமஸ்கிருத வகுப்பு, பண்ணிசை வகுப்பு என்பனவற்றை இலவசமாக நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகுப்புகளைப் பயன்படுத்த மாணவர்கள், ஆசிரியர்கள், முன்வரவேண்டும். மீண்டும் ஒரு சைவத் தமிழ்ப் பரம்பரையை உருவாக்க சைவத்தமிழ் உலகம் முன்வர வேண்டும் - என்றார். (எ)

# புங்குடுதீவு
## அருள்மிகு அந்தோனியார் ஆலய உயர்திருவிழா
~ 10.04.2005 ~

08-04-2005 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொடியேற்றம்
குழந்தைகளுக்கான வேண்டுதல்
செபித்தல் - ஆசீர்வதித்தல்
09-04-2005 சனிக்கிழமை – நற்கருணை விழா மாலை 5.00 மணிக்கு
★ நோயாளர்களுக்கான வேண்டுதல்
செபித்தல் - ஆசீர்வதித்தல்
10-04-2005 ஞாயிற்றுக்கிழமை – உயர்திருவிழா
சமாதானத்துக்கான வேண்டுதல்
சமாதானச் செய்தி - புறாவிடுதூது
காலை 8.30 மணிக்குத் திருவிழா திருப்பலி (பூஜை)
9.30 மணிக்கு அற்புதரின் தேர்ப்பவனி
நாதஸ்வர இசையுடன் நடைபெறும்.
யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
பக்தர்களையும் யாத்திரீகர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

புங்குடுதீவு. (43751) (24-18-16) - ஆலய நிர்வாகம்.



# நன்றிகள் உரித்தாகட்டும்!

கீழ்க்கரவை யாக்கரு வரசித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ தீர்த்தநாளன்று (25.03.2005) வெள்ளிக்கிழமை -

கடந்த மூன்று வருட காலமாக மஹோற்சவ குருவாகக் கடமையாற்றிச் சேவைபுரிந்த -

**சிவப்பிரம்மஸ்ரீ ராம் சபாநாதக் குருக்கள்** ஆகிய
எனக்குக் கீழ்க்கரவை மக்களும் 10 நாள் ஆலய உற்சவ
உபயகாரர்களும் ஆலயத் திருப்பணிச் சபையினரும்
ஒன்றிணைந்து
"சிவாச்சார்ய திலகம்"
எனும் சிறப்புப் பட்டம் சூட்டி, பொன்னாடை போர்த்தி பதக்கமும் அணிவித்துக் கௌரவித்தமைக்காக எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நிகழ்வுக்கு உதவியாக அனுசரணை வழங்கிய இந்து மதகுருமார் ஒன்றியத்தினருக்கும் பதக்கமும் பட்டமும் வழங்கிய என்னுடைய தீட்சாகுரு **பிரம்மஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்** அவர்களுக்கும் விழாவுக்குத் தலைமை வகித்த சபைத் தலைவர் **திரு.தங்கத்துரை** (கிராம சேவையாளர்), உபதலைவர் **திரு.ஐ.இரத்தினம்**, செயலாளர் **திரு.தனபாலசிங்கம்** ஆகியோருக்கும் -

குறுகியகால அவகாசத்துக்குள் இந்தக் கௌரவிப்பு நிகழ்வைச் செய்யவேண்டும் என்று தீர்மானித்து அதற்காக அரும்பாடுபட்டுழைத்தவர்களான பொருளாளர் **திரு.சிவகுமாரன்** (சமுர்த்தி வங்கி முகாமையாளர்), **திரு.செல்வராசா** (ஆசிரியர்) ஆகியோருக்கும் மற்றும் இதற்கு உதவியாயிருந்த அனைவருக்கும் நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இவர்கள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று சுபீட்சமாக வாழ யாக்கரு வரசித்தி விநாயகரின் திருப்பாதக் கமலங்களைப் பிரார்த்தித்து வணங்குகின்றேன்.

சாரதாபீடம்,
அல்லையம்பதி சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம். - சிவஸ்ரீ ராம் சபாநாதக் குருக்கள்.
(43757) (24-18-16)



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 6676 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 01-3-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5343016 - 5358413 | |

லக்கினம் துலாம்

வெற்றி இலக்கங்கள்
**05 29 51 53**

ஜக்பொட் பரிசு
ரூபா.17,94,500/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 25,33,600/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,30,936 | 10/- | 33,09,360/- |
| 2.இலக்கங்கள் | 30,446 | 20/- | 6,08,920/- |
| 1.இல + லக்கினம் | 30,067 | 30/- | 9,02,010/- |
| 2.இல + லக்கினம் | 2,790 | 100/- | 2,79,000/- |
| 3.இலக்கங்கள் | 788 | 500/- | 3,94,000/- |
| 3.இல + லக்கினம் | 79 | 5,000/- | 3,95,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 17,94,500/- | - |
| மொத்தம் | 3,95,116 | - | 74,40,540/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 74,40,540/-

தொடர் இல. 4397650 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5351122-3-93
5357432-7-46
5346065-5-81
5353880-3-87
5357989-1-96


## வேம்படி மகளிர் பாடசாலையில் இலங்கை வங்கிக் கிளை

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளுக்காக, இலங்கை வங்கி யாழ். மேற்றரக் கிளை அதன் கிளை ஒன்றினை இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலைக் கட்டடத்தினுள் திறந்துவைக்கவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக் கிளையின் உதவிப் பொதுமுகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் கிளையினைத் திறந்துவைப்பார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான 'பொன் அரும்புகள்' கணக்குகள் ஆரம்பித்து வைக்கப்படும் என்று யாழ்ப்பாணம் இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளர் சி.நடராஜலிங்கம் தெரிவித்தார்.(ஐ-7)

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அடுத்தஆண்டில் மருத்துவபீடம்

மட்டக்களப்பு,ஏப்.4

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு மருத்துவபீடம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் டி.வரகுணம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையிலே வேந்தர் இதனைத் தெரிவித்தார். அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ள மருத்துவபீடத்துக்கென 50 மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். அத்துடன், மருத்துவபீட மாணவர்களுக்கான சகல வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (3-13)

## பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்

ஆனைக்கோட்டை சிவன் ஆலயத்தில் 'திருமுறைச் செல்வம்' என்னும் பொருளில் சொற்பொழிவாற்றிய ஆசிரியர் பிரசங்கவாரி ஜெயரட்ணம் கோகலே பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பெருவிழாக் கால பிரதம குரு பிரம்மஸ்ரீ. சோ.கௌரீஸ்வர குருக்கள் பொன்னாடை போர்த்து அவரைக் கௌரவித்துள்ளார்.

இதேவேளை, திருவிழாக் காலங்களில் பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றியவர்களுக கான சிறப்புப் பரிசில்களை வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா வழங்கியுள்ளார். (3-185)

## விபத்தில் வயோதிபர் காயம்

நுணாவில் - பருத்தித்துறை வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஹன்டர் - மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் அரசடி றோட், இருபாலை, கோப்பாயைச் சேர்ந்த செல்லையா தனபாலசிங்கம் (வயது 60) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவருடன் பயணஞ்செய்த மற்றொருவர் சிறுகாயங்களுக்குள்ளானார். (ஐ-12)


# திருமணக் கார் வாடகைக்கு

✦ திருமண வைபவங்கள்
✦ விசேட வைபவங்களுக்கு
கார் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
**021 222 2931**
(43799) (24-18-16)



# ஆண்டஞ்சலி

திருநெல்வேலி
**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்**
வைகாசி விசாக நாயக
வளந்துப் பொங்கலை
160 ஆண்டுகளுக்கு முன் அவ்வூர்
சமரபாகுதேவன் வளவு இல்லத்தில்
ஆரம்பித்த "கல்வீட்டார்"
நாகப்பர் வைத்திலிங்கம்
அவர்களின் சகோதரரின் பேரன்
முத்தையா இராமசாமி அவர்களின்
பாரியார் வளந்துப் பங்காளர்
திருமதி இ.கோகிலம் அவர்களின்
ஆத்மா சாந்தியடைய
அம்மன் திருவருளை வேண்டுகின்றோம்.
- **காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்,**
04-04-2005 **மூன்றாம் உரிமைக்காரர்.**
(சி-41982) (24-18-16)


## மனோ கணேசனுக்குக் கொலை மிரட்டலாம்

கொழும்பு,ஏப்.4

நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகப் பொலீஸ் மா அதிபரிடம் முறையிடப்பட்டுள்ளது.

களுபோவளையில் இடம்பெற்ற கொலையொன்றுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்வதற்கு மனோ கணேசன் நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காகவே இந்தக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-13)




உ
# நீர்வேலி கந்தசுவாமி கோயில்
## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2005
## விசேட உற்சவ கால நிகழ்வுகள்

06.04.2005 புதன் காலை 10 மணிக்கு கொடியேற்றம்
11.04.2005 திங்கள் வசந்த உற்சவம் (கார்த்திகை)
13.04.2005 புதன் இரவு 10.17 பார்த்திப வருடப்பிறப்பு விசேட பூசை
15.04.2005 வெள்ளி இரவு மஞ்சம்
20.04.2005 பி.ப. 4.00 மணிக்கு மாம்பழத்திருவிழா
இரவு கைலாய வாகனம்
21.04.2005 வியாழன் பி.ப. 5.00 மணிக்கு. வேட்டைத்திருவிழா
22.04.2005 வெள்ளி இரவு சப்பறத்திருவிழா
23.04.2005 சனி இரதோற்சவம் காலை 6.30 மணிக்கு
வசந்தமண்டபப் பூசை 8.30 மணிக்கு. ரதம்
வீதி உலா பி.ப. 1.00மணிக்கு. இராதாவரோகணம்
பொது உபயம்
24.04.2005 ஞாயிறு காலை 10.00 மணிக்கு தீர்த்த உற்சவம்
இரவு 7.00 மணிக்கு துவாஜாவரோகணம்
25.04.2005 திங்கள் மாலை திருக்கல்யாண உற்சவம்

முருகன் அடியார்கள் அனைவரும் மேற்படி மஹோற்சவ
காலங்களில் பெருமானைத் தரிசித்து
அவனருளாலே அவன்தாள் வணங்கி
அருள் பெற்றுய்வீராக.

நீர்வேலி. - **பரிபாலன சபையினர்,**
(43781) (24-18-16) **நீர்வேலி கந்தசுவாமி கோயில்.**



# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 08 - 1919



மறைவு 20 - 03 - 2001

அமரர் **செல்லமுத்து சரவணமுத்து**

திதி: 04-04-2005

*மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்*
*புனித வாழ்வு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!*
*வருடங்கள் நான்கு உருண்டோடினாலும்*
*உயிருள்ள வரை எமக்காய் வாழ்ந்தாய் – அப்பு*
*எம் உயிர் உள்ளவரை உம்மை நாம் மறவோம்.*

கைதடி வடக்கு,
கைதடி.
(43660) (24-18-16)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



# ஈராண்டு கண்ணீர்ப் பூக்கள்

தாயின் மடியில் 30 - 01 - 1962



மண்ணில் மடியில் 04 - 04 - 2003

**பொ.முருகானந்தன்** (B.A.)

*(கிராம அலுவலர் - அம்பன் குடத்தனை - பொற்பதி செம்பியன்பற்று வடக்கு - மருதங்கேணி - பிரதேச செயலகம்)*

திதி: 11-04-2005

அன்பானவரே
ஆசை அப்பாவே
இன்பமுடன் வாழ்ந்த - எம்மை
ஈசனவன் பிரித்தென்ன?
ஈராண்டுகள் ஆகியது
எம் விழி நீர் துடைக்க!
ஏக்கங்களைப் போக்க
ஒருமுறை வரமாட்டீர்களா?

*யார்வத்தை,*
*வதிரி, கரவெட்டி.*
(C/41943)(46-18-16-24)

மனைவி, பிள்ளைகள்
*(ஜது, அபி)*
மற்றும் குடும்பத்தினர்.

# முல்லைத்தீவு தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் கோரி மகஜர்

புதுக்குடியிருப்பு,ஏப்.4

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றும் சகல தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு முல்லைத்தீவு வலயத் தொண்டர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சிடம் கோரியுள்ளது.

இதுதொடர்பாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்து பல ஆண்டுகளாக மாவட்டத்தின் கல்வி நடவடிக்கைகளை விருத்திசெய்வதில் தொண்டர் ஆசிரியர்களுக்கும் கணிசமான பங்கு உண்டு என்பது தாங்கள் அறிந்ததே. எந்தவித வேதனமும் பெறாது நேரத்தையும் உழைப்பையும் சிறார்களின் கல்வியை வளர்ப்பதற்காக அர்ப்பணித்தோம். தொண்டர் ஆசிரியராகப் பணிபுரிந்த காலப் பகுதியில் நடைபெற்ற கருத்தரங்குகளில் பங்குகொண்டு எமது வாண்மையை விருத்திசெய்திருந்தோம். எனினும், எங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காததையிட்டு நாம் வேதனை அடைகின்றோம். இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து தொண்டர் ஆசிரியர்களுக்கும் நேர்முகத் தேர்வு நடைபெற்று, நிரந்த நியமனம் வழங்கப்படும் என்று பல தடவைகள் ஊடகங்களினூடாகச் செய்திகள் வெளிவந்த போதும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, எங்களின் நிலையைக் கருத்திற்கொண்டு எமக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்று பணிவாக வேண்டுகின்றோம் -என்றுள்ளது. (ஜ-353-202)

## பாலத்திலிருந்து தவறிவீழ்ந்த இளைஞன் காயம்

கிளிநொச்சி,ஏப்.4

வவனிக்குளம், செல்வபுரம் பகுதியில் உள்ள முதலாம் பாலத்தினுள் சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வவனிக்குளம செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த யோகரத்தினம் நிஜயகாந்த் (வயது 19) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் உடனடியாக மல்லாவி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பின்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(ஜ-12)

## தொலைத்தொடர்பு வசதிசெய்து தரக் கோரிக்கை

முழங்காவில்,ஏப்.4

கிராஞ்சி, வலைப்பாடு மற்றும் பொன்னாவெளிப் பகுதி மக்கள் தமக்குத் தொலைத்தொடர்பு வசதி செய்துதருமாறு கோரியுள்ளனர்.

தமது அன்றாட தொலைத்தொடர்புத் தேவைகளுக்குக்கூட நீண்ட தூரத்திற்கு அப்பால் உள்ள ஜெயபுரம், முழங்காவில் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது என்றும் அவர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

(எ-323-203)

## இரணைமடு வாய்க்கால் திறந்ததால் வட்டக்கச்சி வீதியில் சிரமங்கள்!

வட்டக்கச்சி,ஏப்.4

இரணைமடுக்குளத்தின் பிரதான வாய்க்கால் திறந்து விடப்பட்டுள்ளதால், வட்டக்கச்சிப் பிரதான வீதியூடான போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக இரணைமடுக்குளத்தில் இருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்கான பிரதான வாய்க்கால் திறந்துவிடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகத் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படும் வட்டக்கச்சிப் பிரதான வீதியின் குறுக்காகப் பல இடங்களில் வாய்க்கால்கள் பாய்ந்தோடுகின்றன. இதனால், பயணிகள் பல இடையூறுகளை எதிர்கொள்கின்றனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்துச் செயற்படவேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஜ-405-202)

## பொறியியல் பகுதி ஆய்வுகூடம் கிளிநொச்சியில் திறக்கப்பட்டது

கிளிநொச்சி கட்டடத் திணைக்களத்தின் பொறியியற் பகுதிக்கு 'நிகொட்' நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட ஆய்வுகூடம் கடந்த முதலாம் திகதி நண்பகல் 12 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஆய்வுகூடம் அதிநவீன கருவிகளுடன் வடபகுதி முழுவதிற்கும் சேவையை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தேசியக் கொடியை நிர்வாக சபைப் பொறுப்பாளர் பகீரதனும் மங்கள விளக்கினை துறைசார் அதிகாரிகளும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து கட்டடத்தை 'நிகொட்' திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன் வைபவரீதியாக நாடா வெட்டித் திறந்துவைத்தார். (ஜ-305-203)

## அழிந்த கட்டடங்களை திருத்துவதில் சிரமம்

ஒட்டுசுட்டான்,ஏப்.4

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் போரினால் அழிவுற்ற கட்டடங்கள் மீள அமைக்கப்படாமல் அழிவடைந்தே காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தச் சூழ்நிலையில் சேதமாக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள், வீடுகள் போன்றவற்றில் அநேகமானவை இன்னும் மீளமைக்கப்படாமலேயே உள்ளன.

மீளவும் வீடுகளை நிர்மாணிப்பதற்கென வழங்கப்பட்டுவரும் ஒரு லட்சம் ரூபாவிற்கு விண்ணப்பித்த பலருக்கு அவ்வுதவி இதுவரை வழங்கப்படாமையாலேயே இந்நிலை தொடர்வதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஓ-341-202)

## ஸ்கந்தபுரத்தில் ஆலங்கட்டி மழை

ஸ்கந்தபுரம், ஏப்.4

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் அண்மையில் மழை பெய்தபோது பனிக்கட்டிகள் வீழ்வதைக் கண்டதாக மக்கள் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் ஸ்கந்தபுரம் பகுதியில் மழை பெய்தது. அப்பொழுது மழைநீருடன் சேர்ந்து சிறிய - உப்புக் கட்டி அளவில் - பனிக்கட்டிகளும் வந்து விழுந்தன. இப்பனிக்கட்டிகளை பலர் கைகளில் எடுத்துப் பார்த்தனர்.

பனிக்கட்டிகள் கூரை மீது விழுந்த போது மழை நீரின் சத்தத்திலிருந்து வித்தியாசமான சத்தம் எழுந்தது. ஒரு மணிநேரம் இவ்வாறான பனிக்கட்டியுடன் கூடிய மழைபெய்தது.(ஜ-381-202)

## மெய்வன்மை போட்டிகள்

முழங்காவில்,ஏப்.4

பூநகரி மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் அண்மையில் சிறப்பாக நடைபெற்றன.

பாடசாலை முதல்வர் பொன்.தில்லைநாதன் தலைமையில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராகக் கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரி.சின்னராசா கலந்துகொண்டார். (ஜ-323-203)

## வீட்டுத் தேவைகளுக்குப் பனைமரம் முல்லைத்தீவில் பெரும் பற்றாக்குறை


ஒட்டுசுட்டான்,ஏப்.4

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீடுகள் அமைக்கப் பயன்படுத்தும் பனை மரங்களுக்குப் பெரும் பற்றாக்குறை காணப்படுகின்றது.

வீடுகள் அமைப்பதற்குப் பனைமரங்கள் கிடைக்காததால் தற்போது தென்னிலங்கையிலிருந்து விற்பனைக்கு வரும் தரம் குறைந்த மரங்களையே மிகக்கூடிய விலையில் பெற்றுக்கொள்வதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால போர் அனர்த்தங்களின்போது பெரும் எண்ணிக்கையான பனை மரங்கள் அழிக்கப்பட்டன.

இதனால், ஒரு மரம் 2 ஆயிரம் ரூபா வரை விலைபோனது. ஆயினும், தற்போது பனை மரங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. (ஜ-341-202)



பரந்தன் - முல்லைத்தீவுப் பிரதான வீதியில் புளியம்பொக்கணைச் சந்திக்கு அருகில் உள்ள பாலம் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களின் பாவனைக்காக விடப்பட்டுள்ளது. நீண்டகாலமாக இந்தப் பாலம் புனரமைப்புச் செய்யப்படாது இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-352)

## கிளிநொச்சி நகரைச் சூழ நுளம்பு ஒழிப்புப் பணி

பரந்தன்,ஏப்.4

கிளிநொச்சி நகரப்பகுதியை அண்டிய கிராமங்களில் டெங்கு, மலேரியா போன்ற நோய்களைப் பரப்பும் நுளம்புகளின் குடம்பிகள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

பொன்நகர், விவேகானந்தநகர், அறிவியல் நகர் போன்ற கிராமங்களில் குடம்பிகள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்றும் இது தொடர்பான வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கிளிநொச்சி மாவட்டப் பூச்சியியல் ஆய்வாளர் பொன்மயில் இராசதுரை தெரிவித்துள்ளார். (ஜ-352-203)

## ஊரியான், குமரபுரம், பரந்தன் கிராமங்கள் அபிவிருத்தியில் புறக்கணிப்பு என விசனம்

பரந்தன்,ஏப்.4

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊரியான், குமரபுரம், உமையாள்புரம், பரந்தன் ஆகிய கிராமங்கள் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீடுகள் அமைப்பதற்கான உதவிகளை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எவையும் வழங்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அத்துடன், உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்ட பின்னர் உதவித் திட்டங்கள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த இப்பகுதி மக்கள் தற்போது தற்காலிகக் கொட்டில்கள் அமைத்தே மீளக் குடியமர்ந்துள்ளார்கள். இவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட போதிலும் இதுவரை அதற்கு வேண்டிய உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை என்று இக்கிராமங்களின் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஜ-352-202)

## வீதி படுமோசம்

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி இராமநாதபுரம் செல்லும் வீதியில் பெரும் குண்டும் குழிகளும் காணப்படுவதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். (ஜ-352-203)

## பாடசாலைகளின் பௌதிக வளர்ச்சியில் பெற்றோருக்கும் முக்கிய பங்குண்டு

### வேரவில் விளையாட்டு நிகழ்வில் பூநகரி கல்விப்பணிப்பாளர்

முழங்காவில்,ஏப்.4

மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் மட்டுமன்றிப் பாடசாலைகளின் பௌதிகவளங்களைப பாதுகாப்பதிலும் பெற்றோர்களது கவனம் இருக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் பூநகரிக் கோட்டக் கல்வி அலுவலர் தி.கணபதிப்பிள்ளை.

வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இல்லமெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது-

வேரவில் இ.ம.வித்தியாலய ஆசிரியர் பற்றாக்குறை தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை '1 சி' தரப் பாடசாலையாக இருக்கிறது. இங்கு மேலும் கட்டடங்களை அமைத்து இந்தப் பாடசாலையை இன்னும் தரம் உயர்த்துவதற்குப் போதிய காணி வசதிகள் இல்லாமை பெருங்குறையாகவேயுள்ளது. வளர்ந்துவரும் இப்பாடசாலையின் வளங்களை உரியமுறையில் வளமாக்கவேண்டிய பொறுப்புகளில் ஒருபகுதி பெற்றோரிடமே உள்ளது. எனவே, அவர்களும் இதில் கவனமெடுக்கவேண்டும்.

மாணவர்கள் நல்லநிலையில் வளர்ச்சியடைய கல்வி எவ்வளவு முக்கியமானதோ அதேபோன்று பாடசாலை, கட்டடங்கள் என்பன வளர்வதற்கு காணிகள் அவசியம் தேவை.

இந்தப் பாடசாலை 1989 ஆம் ஆண்டு தொடக்கம் நிரந்தரமான ஒரு காணியைப் பெறுவதற்கு முயற்சியெடுத்து வருகின்றது. இந்த முயற்சிக்குப் பெற்றோர்களும் கைகொடுத்து உதவமுன்வரவேண்டும். தமது பங்களிப்பையும் வழங்க வேண்டும் - என்றார். (ஜ-323-203)

### உதயன் ஆதரவுடன் நடைபெறும்

# சதாவதானி கதிரவேற்பிள்ளை நினைவுக் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.4

சதாவதானி கதிரவேற்பிள்ளையின் குரு பூசை தினத்தை முன்னிட்டு சனசமூக நிலையத்தினர் கட்டுரைப் போட்டியை ஆறாவது வருடமாக இந்த வருடமும் நடத்துகின்றனர்.

போட்டிகளில்' பங்குபற்றவுள்ளவர்களின் கட்டுரைகள், 'நாவலர் வழிவந்த கதிவேற் பிள்ளை', 'ஈழத்துப் புலமையின் ஆழத்தை உலகறியச் செய்த சதாவதானி நா.கதிரவேற் பிள்ளை', 'சதாவதானி என்றும் நினைவில் நிற்பவர்' ஆகிய தலைப்புகளில் அமையவேண்டும் என்றும் -

கட்டுரைகள் ஏ4 தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதவையாக இருக்கவேண்டும் என்றும் - கட்டுரைப் போட்டியை நடத்தும் பருத்தித்துறை சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் ஏழாம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ 'செயலாளர், சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், பருத்தித்துறை' என்ற முகவரிக்கு நேரடியாகவோ, அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கட்டுரைப் போட்டிக்கு 'உதயன்' கடந்த ஐந்து வருடங்களாக ஆதரவு வழங்கி வருகிறது. (203)

## கட்டடத் திறப்பு விழா

பரந்தன்,ஏப்.4

இராமநாதபுரம் கலைச்சுடர் சனசமூக நிலையப் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் சு.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருந்தினராகவும் -

கரைச்சி பிரதேச செயலர் செல்வி க.சுலோஜனி, கரைச்சி விசேட ஆணையாளர் பொன்நிதியானந்தன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செல்வி த.உஷா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் -

வட்டக்கச்சி பிரதேசப் பொறுப்பாளர் சுடர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் இளமுருகன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-352-203)

## நூல் அறிமுகவிழா

பரந்தன்,ஏப்.4

பரமபுத்திரனின் 'தூயமனதுடன்' என்ற நாடகங்களின் தொகுப்புநூல் அறிமுகவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். (எ-352-203)

## மீன்பிடி உபகரணம் வழங்கும் நிகழ்வு

பரந்தன்,ஏப்.4

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு நெல்லியானில் இடம்பெறும். (எ-352-203)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி,ஏப்.4

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட மனைமுகாமைத்துவப் பயிற்சி நெறியில பயின்று சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு தென்மராட்சி இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி செ.நாகேந்திரம் தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் பி.சிவதட்சணாமூர்த்தியும், சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாயகமும், உப அதிபர் க.தேவநேசனும் கலந்து பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர். இப்பயிற்சியில் 25 மாணவர்கள் சித்தியடைந்தனர். (எ-31)

## ஒயில் வகைகளின் விலைகள் அதிகரிப்பு

அரியாலை,ஏப்.4

என்ஜின் ஒயில் வகைகளின் விலைகள் 15 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த் புதிய விலை அதிகரிப்பு கடந்த மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்திருப்பதாக ஒயில் விநியோக முகவர் கம்பனிகள் அறிவித்துள்ளன.

இதன்படி, யாழ். குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் லீற்றர் 140 ரூபாவாக விற்கப்பட்ட என்ஜின் ஒயில் லீற்றர் 160 ரூபாவாகவும் 130 ரூபாவாக விற்கப்பட்ட 2.ரீ - ஒயில் 150 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டன. ஏனைய ஒயில் வகைகளின் விலைகளும் இதே போன்று அதிகரித்துள்ளன. (ஐ-17)


## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள Sony T.V. (Japan), VEDIO டெக், AUDIO DUB டெக், PIONEER செற், DVD MP3 பிளேயர், AUDIO கெசற் டெக், அம்பு என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: ஜெகன் வீடியோ, ஓடியோ சென்ரர்
சட்டநாதர் வீதி, திருநெல்வேலி.
(43682) T.P.: 077 6547245 (16-38-29-39)

## ஆண்/பெண் உதவியாளர் தேவை

சகல வசதிகளுடன் கூடிய வீடுவளவையும் 85 வயதான ஒருவரையும் பார்த்துப் பராமரிக்கக் கூடிய ஆண்/பெண் உதவியாளர் உடனே தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். மற்றும் கடமை பற்றிய விவரங்களை நேரில் பேசி முடிவெடுக்கலாம்.

"சிவஸ்கந்தன் தான்"
ஞானாசாரியார் கல்லூரி வீதி,
கரவெட்டி.

தொடர்புகளுக்கு :
த.கந்தசாமி
ஓய்வுபெற்ற கூட்டுறவு
உதவி ஆணையாளர்.

(C/41880)(46-29-16-38)


# மரண அறிவித்தல்கள்

## சவுந்தரநாயகம் ஜெயரட்ணம்



பத்தாவத்தை, இளவாலையைச் சேர்ந்த சவுந்தரநாயகம் ஜெயரட்ணம் சனிக்கிழமை 02.04.2005 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சவுந்தரநாயகம்-செல்வநாயகியின் அன்பு மகனும் மகிமைநாயகி, புஸ்பநாயகி, இரட்ணாவதி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற செபரத்தினம், அன்றூ ஆகியோரின மைத்துனரும் வசந்தராஜா, வசந்தராணி, சயந்தராணி, நேசராஜா, ஜெயராஜா, செல்வகுமார் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.04.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் திருப்பலியின் பின் நல்லடக்கத்துக்காக இளவாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.ரட்ணாவதி,
வே.அ.ஞானேந்திரன்,
(யா/புனித பத்திரிசியார் கல்லூரி).

"பற்றிமாகோம்',"
பத்தாவத்தை,
இளவாலை. (43821) (39-16-38-29)

## திருமதி கந்தையா நல்லம்மா



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், நந்தாவில் அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நல்லம்மா நேற்று (03.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி கனகவதி சபாரட்ணத்தின் தாயாரும் காலஞ்சென்ற S.M. கந்தையா, அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.ஜெயபாலசிங்கம்,
(பெறாமகன்)

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில். (43820) (39-16-38-29)

# வணிகத்துறைப் பணியாளர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறை கட்டாயம்

## உதவித் தொழில் ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.4

குடாநாட்டில் வர்த்தக நிறுவனங்களில் வாரம் ஒன்றிற்கு 45 மணித்தியாலங்கள் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒன்றரை நாள்கள் கட்டாயமாக விடுமுறை வழங்கவேண்டும் என்று யாழ். உதவித்தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

பணியாளர்களுக்கு உணவு இடைவேளைக்கு ஒருமணிநேரம் வழங்கவேண்டும் என்றும் வார இறுதி விடுமுறையாக ஒன்றரை நாள்களும் போயா மற்றும் விடுமுறை நாள்களிலும் கடைகளை மூடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

யாழ்மாவட்டத்தில் உள்ள அனைத்து வணிகர் கழகங்களுக்கும் அவர் அறிவுறுத்தியுள்ளார். தொழிற் சட்ட நியதிகளுக்கு மாறாகச் செயற்படுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இந்த அறிவுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (3)

## பங்குனித் திங்கள் வேள்வி உற்சவம்

குஞ்சுப்பரந்தன் அருள்மிகு பொறிக்கடவை அம்மன் ஆலய பங்குனித்திங்கள் வேள்வி இன்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை அதிகாலைவரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அபிசேக ஆராதனைகள், விசேட பூசைகள், மகேஸ்வர பூசை என்பன இடம்பெறும்.

இரவு நிகழ்வாக காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டி, பறவைக்காவடிகள் போன்றவற்றுடன் பக்தர்கள் புடைசூழ அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெறும். (எ-352-203)


உ
ஓம் கணபதி துணை

## சௌள உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்.

நிகழும் மங்களகரமான தாரண வருடம் பங்குனித் திங்கள் 22ஆம் நாள் இன்று (04.04.2005) திங்கட்கிழமை காலை 9.52 மணி முதல் 10.40 மணிவரையுள்ள இடபலக்கினமும் தசமித்திதியும், திருவோணநட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுபவேளையில்

சிவராமலிங்கக் குருக்கள் சிவராச சர்மா
அவர்களின் பௌத்திரனும்
சிவஸ்ரீ மகேந்திர சர்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரனுமாகிய

### சிரஞ்சீவி ம.லயபிரகாஷ்

அவர்களுக்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளை முன்னிட்டு யஞ்ஞோபவத தாரண பிரம்மோபதேசஞ் செய்யத் திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் சுற்றம் சூழ வருகைதந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உபநயன மண்டபம்
"வீரமாகாளி அம்மன் கோயில்" 36,ராமநாதன் தெரு,கொழும்பு-11

தங்கள் நல்வரவை விரும்பும்:
சி.மகேந்திர சர்மா - வசந்தி
தம்பதிகள்

(43823)(16-38-39)

# ENGLISH

UNLIMITED

**ONLY FROM SAAMSTECH**

நாளை முதல்
ஆங்கில, சிங்கள நேரடி வகுப்புகளுக்கான கட்டணம்
ரூபா 8000/-
ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

சலுகைக்கட்டணத்தோடு பதிவுசெய்வதற்கான சந்தர்ப்பம் இன்று மட்டுமே

ஆங்கிலம் : ரூபா 3000/-
சிங்களம் : ரூபா 2000/-

பதிவுகளுக்கு
SAAMSTECH, 841, HOSPITAL RD., CHUNDIKULI,JAFFNA

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்
SAAMSTECH, 841, HOSPITAL RD., CHUNDIKULI ,JAFFNA. 4591571
SAAMSTECH, கொடிகாமம் வீதி, கரவெட்டி.
18.04.2005 முதல் யாழ்.வைத்தியசாலை எதிரிலும் வகுப்புகள்.

48 மணிநேரங்களில் நீங்கள் ஆங்கிலத்தில் கதைக்க நாங்கள் 100 % உத்தரவாதம்.

**ENGLISH UNLIMITED :** நீங்களும் உங்கள் குழந்தைகளும் ஆங்கிலத்தில் கதைக்கும் திறனை விரும்பிய வரை அதிகரிக்க எமது பல்லாயிரக்கணக்கான வசன ஒலிப்பயிற்சிகளுக்கூடாக மேலதிக கட்டணம் இன்றி நீங்கள் விரும்பிய அளவுக்குப் பயிற்சி பெறலாம். இச்சலுகை 04.04.2005 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு மட்டுமே.

(43776)(16-38-29-39)

உ
சித்திர வேலவர் துணை

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுதப் பெருமானின் திருவருட் செல்வர்
**நாகலிங்கம் பரமநாதர்** கோப்பாய் வடக்கு அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## 31ஆம் நாள் நினைவஞ்சலிப் பிரார்த்தனை

| மலர்வு | நிறைவு |
|---|---|
| 1920 - 01 - 02 | 2005 - 02 - 05 |



அருவமும் உருவும் ஆகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனம் உலகம் உய்ய.

மூன்று காலப் பூசையின் போதும் ஸ்ரீ சித்திர வேலவப் பெருமானுக்கு ஆசார சீலராகப் பக்தியோடு மலர்கள் எடுத்துச் சென்று அர்ப்பணித்து திருமுறைகளையும் கந்தபுராணப் படிப்பையும் பாடி அனைவரது உள்ளங்களுக்கும் தெய்வீக சிந்தையை ஊட்டி வாழ்ந்த அமரர் **நாகலிங்கம் பரமநாதர்** அவர்களது புனித ஆன்மா சித்திரவேலவர் பாதக்கமலங்களில் சரண்புகுந்து பேரானந்த ஒளிபெற வேண்டியும் அவரது ஆன்ம ஒளி குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் திருவருள் வழிகாட்ட வேண்டும் எனவும் வேலவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

ஆலய தர்ம பரிபாலன சபை. ஞானபண்டித சைவவிருத்திச் சங்கம்.
வடகோவை. ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில்.
சைவ நற்சிந்தனைக் கழகம். கோப்பாய்.
(43824)(33-11-17)

# மரண அறிவித்தல்

## செல்வி பொன்னுத்துரை தர்சனி



உரும்பிராய், மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி பொன்னுத்துரை தர்சனி அவர்கள் நேற்று (03.04.2005) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் பிறேமா (ஜேர்மனி), சந்திரகலா (கோப்பாய் அரசினர் வைத்தியசாலை), சுஜாஜினி, சுதர்சன் (U.K), சுகிதரன், சுரேந்திரன் (யாழ். பல்கலைக்கழகம் - கலைப்பீடம் 3ஆம வருடம்), சுஜிதா (உரும்பிராய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துரைராஜா (ஜேர்மனி), மதன் (மல்லாகம்), ரமேஸ் (வேலணை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பலாலி வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*மடத்தடி. T.P. 0773164313*

தகவல்:
குடும்பத்தினர்.
(43832)(33-11-17)

## விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பக்கமாக கஸ்தூரியார் வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் நல்லூர், செட்டித்தெருப் பகுதியைச் சேர்ந்த எஸ்.ரி.மூர்த்தி (வயது 69) என்பவர் காயமடைந்தார். (ஒ-15)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில
By. விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை., 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (43822)(33-11-17-35)


## அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவு

கிளி/பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய நூலக அபிவிருத்திக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு முதலாம், 2ஆம், 3ஆம் இடம்முறையே இல. 4869, 4196, 3375. ஆறுதல்பரிசு இல. 4776, 2742, 2408, 3358, 1475, 2726, 3520, 2896, 1319 பரிசில்களைப் பாடசாலையில் பெற்றுக் கொள்ளவும்.

- அதிபர்.
(43827)(33-11-17-35)


**நிறைஞ்சனாஸ் சங்கானை**
விஜய், நரீசா, ரவிகிருஷ்ணா நடிப்பில்
சுக்ரன் (ரீலஸ்)
கா.நேரம்: 11.00 2.45 6.00 (பு.நே)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த
ஏய் (ரீலஸ்)
கா.நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே.)
விரைவில் குருதேவா

**ராஜா யாழ்ப்பாணம்**
இன்று மட்டும் விஜய், பிரியங்கா சோப்றா, விவேக், நடித்த
தமிழன் (ரீலஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, (பு.நே.)
நாளை முதல் சத்தியராஜ், சிபி நடித்த ஜோர்

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
லண்டன் (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00. 3.00. 7.00 (பு.நே.)

**மனோகரா யாழ்ப்பாணம்**
பாரததபன.காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த
கண்ணாடி பூக்கள்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (ரீலஸ்)





## 02.04.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 300180613 இலிருந்து 300198096 வரை

சீட்டிழுப்பு இல. 1595

**02 26 28 38** சுப்பர் எண் **07**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.56,15,100/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 56,15,100/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 26 | 5,000/- | 1,30,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 467 | 1,000/- | 4,67,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,483 | 500/- | 7,41,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,470 | 40/- | 8,98,800/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,302 | 20/- | 4,26,040/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,19,487 | 10/- | 31,94,870/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.73,58,210/-

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 64,68,350/-**

தொடர் இல. 200209642 க்கு மேற்பட்ட டிக்கட்டுகள் 2005 ஏப்ரல் 06 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

300184545-0-61
300192542-0-66
300187181-3-74
300183813-0-25
300180988-8-82

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# மரண அறிவித்தல்கள்

## செல்வி சோமசுந்தரம் இராஜேஸ்வரி



அளவெட்டி, புளவதரையில் வசித்த செல்வி சோமசுந்தரம் இராஜேஸ்வரி நேற்று (2005.04.03) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2005.04.04) திங்கட்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரது இருப்பிடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*அலுக்கை,*
*அளவெட்டி.*

தகவல்:
இளையதம்பி நாகேந்திரம்
(43830)(15-18-30)

## இளையதம்பி ஜெகதீசமூர்த்தி



(முன்னாள் உரிமையாளர் - மனோன்மணி விலாஸ், மன்னார்)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மன்னார் - மனோன்மணி விலாஸ் உரிமையாளர் இளையதம்பி ஜெகதீசமூர்த்தி (கிளி) நேற்றுமுன்தினம் (02.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - அன்னப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை - பார்வதியின் மருமகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் இந்திரகுமார் (கிளிநொச்சி), ஜெயமலர், ஜெயமாலா (மல்லாவி), ஜெசிந்தா, ரஜீவன், ஜெனனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, தெட்சணாமூர்த்தி, வரதலெட்சுமி (கனடா), நடேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் சகோதரரும் கஜநிதி (கிளிநொச்சி), உமேஸ் (மல்லாவி), ஜெயதீபன், தினேஸ், சதீஸ் (கனடா) ஆகியோரின் மாமனாரும் கனிஸ்ரா, இந்துஷா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பரசுராமணி, நாகராசா (கனடா), சறோசா (கனடா), காலஞ்சென்ற பாலாம்பிகை, தில்லைவனம் (வட்டக்கச்சி), நேசமணி (கொழும்பு), தருமபூபதி, மங்களநாயகி (புங்குடுதீவு) காலஞ்சென்ற கிருபாநிதி, சாந்தாநிதி (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.04.2005) செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு கேரதீவு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*7ஆம் வட்டாரம்*
*ஊரதீவு, புங்குடுதீவு.*

தகவல்:
புஸ்பமலர் (மனைவி).
(43828)(33-11-17-35)

## நடராசா காந்திகுமார்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் பிரான்சிஸ் றோட், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொறியியலாளர் நடராசா காந்திகுமார் 01.04.2005 வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் அகால மரணமானார்.

அன்னார் நடராசா - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வரும் சுப்பிரமணியம் - ஞானாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் சுகந்தியின் அன்புக் கணவரும் பிரீத்தாவின் அன்புத் தந்தையாரும் நந்தகுமார், நடேசகுமார், ஜீவகுமாரி, செல்வகுமார், செல்வகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செந்தில்குமார், சுதாஜினி, சுகிர்தினி, அருள்குமரன் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.04.2005) திங்கட்கிழமை இல.30, ரோகினி றோட், வெள்ளவத்தை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பொரளை இந்து மயானத்தில் இறுதிக் கிரியைகளின் பின்னர் மாலை 4.15 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 30, ரோகினி றோட்,*
*வெள்ளவத்தை.*

தகவல்:
சே.சுந்தரலிங்கம்
(சி-41992) (33-11-17)

# ஐ.நா. யத்தில் இந்தியா சார்பான இலங் ப் போக்கால் பாக். கடுப்பு!

கொழும்பு,ஏப்.4

ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு இலங்கை அரசு ஆதரவு வழங்கி வருவதாகக் கூறப்படுவது பாகிஸ்தானுக்குக் கடுப்பை ஏற்றியிருப்பதாகத் தெரிகின்றது. இது விடயத்தில் பாகிஸ்தான் அரசின் ஆட்சேபத்தை அந்நாட்டுத் தூதுவர் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நேரடியாகத் தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது.

ஐ.நா. சபையின் மறுசீரமைப்புக் குறித்து தற்போது பேசப்படுகிறது. ஏற்கனவே ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெற்றுள்ள ஐந்து நாடுகளுக்கு மேலதிகமாக இந்தியா, ஜப்பான், பிரேஸில், ஜேர்மனி ஆகிய பெரிய நாடுகள் நான்குக்கும் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வலுத்துவருகிறது.

இதில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவாக இலங்கை நிற்பதே பாகிஸ்தானை எரிச்சலுக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றியிருந்தபோதும அதன் பின்னரும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவிற்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்படுவதற்கு ஆதரவு தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசின் இந்த நிலைப்பாடு குறித்துக் கடும் அதிருப்தி கொண்டுள்ள பாகிஸ்தான் அரசு இலங்கையின் இந்த நடவடிக்கை தெற்காசியாவில் அரசியல் மற்றும் பாதுகாப்புச் சம்பந்தமான போட்டிகளை உருவாக்கிவிடுமென்று எச்சரிக்கை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்த இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் இதுசம்பந்தமான பாகிஸ்தான் ஜனாதிபதியின் அதிருப்தியை இலங்கை ஜனாதிபதியிடம் தெரிவித்தார் என அறியவருகிறது.

இவ்வருட பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஆற்றவேண்டிய உரையை இலங்கை அரச தலைமைத்துவம் முன்னதாகவே தயார்செய்யுமென்பதால் பாகிஸ்தான் இவ்வாறான இராஜதந்திர அழுத்தத்தை முன்கூட்டியே வழங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

# தமது 'டம்மி' வேட்பாளராக...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரவேண்டுமென்பதே பலரின் விருப்பமாக உள்ளது. எனவே, சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பலானவர்கள் அதற்கு எதிராகக் கிளம்புவார்கள் நாட்டின் மத்தியரகத்திலுள்ள அனைத்து மக்களும் இதற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள். பெருந்தோட்ட மக்கள் இதனை எதிர்ப்பார்கள். ஐக்கிய தேசியக் கட்சி இதனை எதிர்க்கும். வடக்கு - கிழக்கு மக்கள் இதனை எதிர்ப்பார்கள். எனவே சர்வஜன வாக்கெடுப்பில் சந்திரிகாவினால் வெற்றிகொள்ளமுடியாது தேல்வியைச் தழுவ வேண்டியேற்படும். இதனை அவர் அறிவார். எனவே, சந்திரிகா அம்மையார் சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்குச் செல்லமாட்டார்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகிறார் சந்திரிகா

**கே:** அப்படியானால் என்ன நடக்கும்?

**எஸ்.பி:** இல்லை. அடுத்த விடயம் பொதுத் தேர்தல். பொதுத்தேர்தலைப் பொறுத்தவரை கடந்த தேர்தலில் 105 ஆசனங்களே பெறப்பட்டன. இப்போது தேர்தலொன்று நடந்தால், அது கூடிய பட்சம் 104 ஆகக் குறையும். இதில் சிலவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆசனங்கள் கூடி, ஜே.வி.பியின் ஆசனங்கள் குறையலாம். ஆனாலும், 105 ஆசனங்களுக்கு மேல் கிடைக்காது. எனவே, பொதுத்தேர்தலுக்கும் சந்திரிகா அமையார் செல்லமாட்டார். அடுத்த பொதுத்தேர்தலொன்றில் உறுதியான பெரும்பான்மை (Comfortable Majority) யொன்றைப் பெறுவதே சந்திரிகா அம்மையாரின் திட்டம்.

**கே:** சர்வஜன வாக்கெடுப்பு, பொதுத்தேர்தல் இந்த இரண்டும் அல்லாத பட்சத்தில் என்னதான் இடம்பெறப்போகிறது?

**எஸ்.பி:** சந்திரிகா அம்மையார் ஜனாதிபதித் தேர்தலொன்றுக்குச் செல்வார். அடுத்த மாதம் அலலது அதற்கு அடுத்தமாதம் அமைச்சரவை மறுசீரமைக்கப்படுபோது மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கும் சந்திரிகா அந்த இடத்திற்கு ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நியமிப்பார். சோதிடம் பார்த்து சுபநேரத்தைப் பெற்றிருக்கும் சந்திரிகா ஜூன் 16ஆம் திகதி ஜனாதிபதிப் பதவியை ராஜினாமாச் செய்வார். அப்போது ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஜனாதிபதியாவார். ஜூன் 23ஆம் திகதி சந்திரிகா அம்மையார் பிரதமராக நாடாளுமன்றத்திற்கு வருவார். ஜூன் 17ஆம் திகதி ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் ரட்ணசிறி அன்றைய தினமே ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுவார். எனவே, ஓகஸ்ட் மாதமளவில் வேட்புமனுத்தாக்கல் இடம்பெற்று, ஒக்ரோபர் அல்லது நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். இதில் ரட்ணசிறி போட்டியிடுவார். பொலீஸ், இராணும் என்று அரச இயந்திரத்தைப் பாவித்து அந்தத் தேர்தலில் வெற்றிபெற்று, ரட்ணசிறி ஜனாதிபதியாகப் பதவியேற்பார். பின்னர் ஜனாதிபதிப் பதவியிலிருந்து ரட்ணசிறி இராஜினாமாச் செய்த பின்னர் பிரதமராகச் செயற்படும் சந்திரிகா மீண்டும் ஜனாதிபதியாகப் பதவியேற்பார். அடுத்த ஆறு வருடங்களுக்கு இதன்படி சந்திரிகா அம்மையார் பதவியிலிருப்பார். இதற்குச் சட்டத்தில் தடையில்லையென்றே நான் நினைக்கின்றேன். இதற்கு நாகரிக ஜனநாயகத் தடைகளே உள்ளன. இரண்டு தடவைகளுக்கு மேல் அவர் பதவியில் இருக்கமுடியாது. ஆனாலும், மூன்றாவது தடவையாக கள்ள வழியில் சென்று அதிகாரத்திலிருக்கவே அவர் முனைகிறார்.

**கே:** இப்போதைய அரசமைப்பின்படி அது சாத்தியமாகுமா?

**எஸ்.பி:** தேர்தல் மூலம் ஒருவர் மக்களினால் இரு தடவைகளுக்கு மேல் தெரிவுசெய்யப்பட முடியாது என்றே அரசமைப்பு கூறுகிறது. மூன்றாவது முறை அவர் தேர்தலில் வரவில்லையே.

மூன்றாவது தடவை அவரை மக்களும் தெரிவுசெய்யவில்லை. நாடாளுமன்றந்தான் தெரிவு செய்தது என்று அவர் சாட்டுச் சொல்லவும் இடமுண்டு. பிரதமராக சந்திரிகா அம்மையார் பதவி வகிக்கும்போது ஜனாதிபதியாக இருப்பவர் தமது பதவியை இராஜினாமாச் செய்கிறார். அவ்வளவுதான். இவ்வாறான நிலையில உடனடியாகப் பிரதமர் பதவியிலிருப்பவர் ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணஞ் செய்துகொள்ள வேண்டுமென அரசமைப்புக் கூறுகின்றது. நாடாளுமன்றம் உடனடியாக ஒருவரை நியமித்தாக வேண்டும். முன்னர் இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்தவர் என்ற விடயங்களெல்லாம் அப்போது கவனத்திற்கொள்ளப்படமாட்டா. இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் முன்னைய ஜனாதிபதியொருவரை நியமிக்கும் அதிகார்ம் நாடாளுமன்றத்திற்குண்டு. திடீரென ஜனாதிபதி பதவி விலகினால் இராணுவத் தளபதியொருவரைக்கூட ஜனாதிபதியாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குண்டு. எனவே, அதனூடாக சந்திரிகா அம்மையார் மீண்டும் ஜனாதிபதியாக முயற்சிக்கின்றார்.

*(மிகுதி நாளை)*

# சந்திரிகா மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியை இராஜினாமாச் செய்த அல்லது பதவிக்காலத்தின் போது உயிரிழந்த ஒரு ஜனாதிபதியின் எஞ்சிய பதவிக்காலத்துக்கு தெரிவு செய்யப்படும் ஒருவர் அதற்காக அதற்குப்பின்னர் இரண்டு தடவைகள் மக்களால் தெரிவு செய்யப்பட முடியாது என அரசமைப்புக் கூறவில்லை.

அத்தகைய சந்தர்ப்பத்தில் முதலாவது பதவிக்காலம் மற்றொருவருடைய பதவிக்காலத்தின் எஞ்சியதாகவும் அடுத்த இரண்டு பதவிக்காலமும் அவருடையதாகவும் சட்டம் கருதுகின்றது.

அதேபோல -

ஏற்கனவே இரண்டு தடவைகள் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் அந்தப்பதவிக் காலங்கள் முடிந்த பின்னர் வேறு ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு பதவியிழந்தால் அந்த இடத்துக்கு-எஞ்சிய பதவிக்காலத்துக்கு ஜனாதிபதியாகப் பணியாற்ற முடியும். அதைத்தடுக்கும் ஏற்பாடுகள் எதுவும் சட்டத்தில் இல்லை. அதனையே ஜனாதிபதி சந்திரிகா தனக்குச் சாதகமான திட்டமாக மனதில் வைத்திருக்கின்றார் என்கின்றார் எஸ்.பி.திஸநாயக்க.

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமது சார்பில் 'டம்மி' வேட்பாளராக ரட்ணசிறி விக்ரமநாயக்கவை நிறுத்துவார் சந்திரிகா குமாரதுங்க. அதேநேரம் தாம் பிரதமராவார்.

"ஜனாதிபதித் தேர்தலில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க வென்றதும் அவர் பதவியை ராஜினாமாச் செய்வார். அந்த இடத்துக்கு அப்போதைய பிரதமரான சந்திரிகா ஜனாதிபதியாவார். அந்தப்பதவிக் காலத்தின் எஞ்சியபகுதி முழுவதும் அவர் பதவி வகிப்பார். அதுதான் சந்திரிகா தற்போது வகுத்துள்ள திட்டம்.

"அடுத்த மாதம் அல்லது அதற்கு அடுத்த மாதம் அமைச்சரவை மறுசீரமைக்கப்படும். அப்போது மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கும் சந்திரிகா அம்மையார் அந்த இடத்துக்கு ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நியமிப்பார்.

"சோதிடம் பார்த்து சுபநேரத்தைக் குறித்துக் கொண்டிருக்கும் சந்திரிகா குமாரதுங்க ஜூன் 16ஆம்திகதி ஜனாதிபதிப் பதவியை இராஜினாமாச் செய்வார் அப்போது ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஜனாதிபதியாவார். ஜூன் 23ஆம் திகதி சந்திரிகா அம்மையார் பிரதமராக நாடாளுமன்றத்துக்கு வருவார்.

"ஜூன் 17ஆம் திகதி ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அன்றைய தினமே ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை விடுப்பார். ஓகஸ்ட் மாதமளவில் வேட்புமனுத்தாக்கல் இடம்பெறும். ஒக்ரோபர் அல்லது நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்.

"அதில் ரட்ணசிறி போட்டியிடுவார். பிரதமராக இருந்துகொண்டு சந்திரிகா ரட்ணசிறிக்காகப் பிரசாரம் செய்வார். பொலீஸ், இராணுவம் என அரச இயந்திரத்தைப் பாவித்து அந்தத் தேர்தலில் ரட்ணசிறியை வெற்றிபெற வைக்கலாம் என சந்திரிகா நம்புகின்றார்.

"ரட்ணசிறி வென்று ஜனாதிபதியாக பதவியேற்றதும் அந்தப்பதவியை அவர் இராஜினாமாச் செய்ய அந்த இடத்துக்கு அப்போதைய பிரதமரான சந்திரிகா ஜனாதிபதியாகி அப்பதவியில்தொடர்வார். ரட்ணசிறி மீண்டும் பிரதமராவார்.

"இத்தகைய திட்டத்தின் கீழ் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு தாம் தொடர்ந்து ஜனாதிபதியாகப் பதவியில் இருக்கமுடியும் என சந்திரிகா கருதுகிறார் . இவ்வாறு மூன்றாவது தடவையும் கள்ள வழியில் ஜனாதிபதியாக அவர் முயற்சிக்கிறார்" - இப்படி உதயனுக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்திருக்கின்றார் எஸ்.பி திஸநாயக்க. (க)

# மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாழ்ந்த நிலப்பிரதேசங்களாகும். இவர்களின் இருப்பிடங்களுக்குள் மழை நீர் புகுந்துள்ளதால் அனைத்து உடைமைகளும் சேதமடைந்துள்ளன.

நேற்றுமுன்தினமிரவு தமது இருப்பிடங்களை விட்டு ஒரு பகுதியினர் வெளியேறி அயலிலுள்ள பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். மற்றொரு பகுதியினர் இரவு முழுக்க கண்விழித்த வண்ணம் பொழுதைக் கழித்துள்ளார்கள். தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. (ஓ-13)

# கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேகக் கூட்டங்கள் சேரும்போது அவற்றினை நோக்கி கடல்நீர் இழுத்துச் செல்லப்படும். இவ்வாறு இழுத்துக்கொள்ளப்படும் நீரின் பாரத்தின் காரணமாக இழுத்துச்செல்லப்படும் இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் வேகமாக அந்த நீர் கடல் மீது விழும். அவ்வாறாக விழுகின்றபோது அழுத்தத்தின் காரணமாக கடல் அலையின் வேகம் அதிகரிக்கும். இந்தச் செயற்பாடு நிலத்துக்கு அருகில் ஏற்படும்போது சூறாவளிபோன்ற தோற்றப்பாட்டினை ஏற்படுத்தும். உண்மையில் அது சூறாவளியோ, சுனாமியோ அல்ல. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-13)

# புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தலைமை அதிகாரிமற்றும்இராணுவ. பொலீஸ் உயர் அதிகாரிகள் மட்டக்களப்பில் வைத்து தமது சாட்சியங்களை அளிப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்த ஆணைக் குழு ஏற்கனவே அம்பாறை மாவட்டத்தில் தனது விசாரணைகளைப் பூர்த்திசெய்துள்ளது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டத் தலைமை அதிகாரி. இரா ணுவ. பொலீஸ் மற்றும் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் 13பேர் தமது சாட்சியங்களை அங்கு பதிவு செய்துள்ளனர். புலிகள் தரப்பில் இருந்தோ. பொது மக்கள் தரப்பில் இருந்தோ இதுவரை எவரும் சாட்சியமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்கள்

## கலாநிதி சரவணமுத்து மகேஸ்வரன்

(சிரேஷ்ட விரிவுரையாளர் - University of Western Sydney)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சிட்னி (அவுஸ்திரேலியா) வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி சரவணமுத்து மகேஸ்வரன் அவர்கள் நேற்று (03.04.2005) ஞாயிற்றுக்கிழமை சிட்னியில் (ஆஸ்திரேலியா) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பத்மினியின் அன்புக் கணவரும் அபர்ணாவின் அன்புத் தந்தையும் சரவணமுத்து (இளைப்பாறிய ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி) - காலஞ்சென்ற செல்வராணி தம்பதியினரின் அன்பு மகனும் துரைரட்ணம் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், புகையிரதத் திணைக்களம்) - இராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், பேராசிரியர் விக்கினேஸ்வரன் (University of Technology, Sydney), திருமதி கலாதேவி நடராஜா (ஆசிரியர், யா/வேம்படி மகளிர் கல்லூரி), குமரேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் நடராஜா (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி), விக்கினேஸ்வரன் (கனடா), Dr.து.செந்தூரன் (உதவி விரிவுரையாளர், யாழ். மருத்துவபீடம்), திருமதி குமுதினி சிவகுமரன் (கனடா), திருமதி சாந்தி விக்கினேஸ்வரன், திருமதி சிவதிலகா குமரேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிராமி, செல்வராணி, ரூபா ஆகியோரின் சிறியதந்தையும் நிருபன், கணேசன், வைஷ்ணவன் ஆகியோரின் பெரிய தந்தையும் பிரபுவின் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

*முகவரி:*
*'சாந்தி நிலையம்' பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*
*தொ.இல. 021 222 6436*

தகவல்:
அ.சரவணமுத்து (தந்தை),
திரு.திருமதி துரைரட்ணம்,
திரு.திருமதி நடராஜா.

## திருமதி கணபதிப்பிள்ளை வேதநாயகி

நெடுந்தீவு மேற்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரமந்தனாறை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை வேதநாயகி நேற்று (03.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (முன்னாள் விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர் - யாழ். இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2005) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் பிரமந்தனாறு பொதுமயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரமந்தனாறு,*
*விசுவமடு,*
*40ஆம் வாய்க்கால்.*

தகவல்:
பிள்ளைகள்.


IIS CITY CAMPUS

MBA

( Master of Business Administration )

Manipal பல்கலைக்கழகத்தின் மேற்படி கற்கை நெறி எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. பாழ் குடாநாட்டில் பயில விரும்புவோர் அல்லது கற்கைநெறி தொடர்பாக ஆர்வம் உடையோருக்கான கருத்தரங்கு ஒன்று நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கருத்தரங்கில் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இடம்: IIS பிரதான மண்டபம்
#100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 16.04.2005 ,
மாலை 03.00 மணி

ஆர்வமுடையோர் பங்கு பற்றிப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மேலதிக விபரங்களுக்கு :
Mrs. Chelvy Suntheresen, Centre Manager
T.P : 021 222 8060

Director
IIS, City Campus,
# 181, Navalar Road, Jaffna.



COMPUTER ACADEMY

O/L மாணவர்களே!

உங்களின் O/L பெறுபேறுகளை இலவசமாகப் பார்வையிட முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.
T.P. NO:- 021-4590291

Internet & E-mail Classes
ஆரம்பம் - 09.04.2005 Sat., Sun. - 9.00a.m.

By: K.R.Sukumar Near the K.T.C.Tuition Centre, Kondavil.



CATWAS.COM
Computer Academy
No.26,SomasundramAvenue,Chundukuli.
T.P:021-2223805

புதிய பிரிவுகள் ஆரம்பம்
08.04.2005

1. Online Diploma in Microsoft Office. Duration-01 Month
2. Diploma in Desktop publishing. Duration-01 Month
3. Microsoft Kids Program.

Diploma courses
MS-Office 1750/= DTP 2000/=
Hardware 1500/= Wep page 3000/=
Video Mixing 2500/=
Certificate courses

VACANCY

Multimedia and Hardware Technology

கற்பிக்க தகைமையுள்ளவர்கள் 08.04.2005இற்கு முன்னர் தங்கள் சுயவிவரக் கோவையினை தபால்மூலமாக விண்ணப்பிக்கவும். இத்துறையில் குறைந்தது ஒரு வருட அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.